JAFFNA

ISSN 1391-9504

# Vijey விஜய்
# விஜய்

20.06.2012 - மலர் 09, இதழ் 16



## வான்கோழியை ஒத்ததான டைனோசர்கள்





## புதுவகை நண்டினங்கள்





## வாசகர் முகம்



## செம்மான் மனிதனின் எச்சங்கள்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்துக்களின் கிளர்ச்சி

முகலாய ஆட்சி அல்லது முஸ்லிம்களின் ஆட்சிக் காலத்தில் பெரும் துயரங்களை அனுபவித்த இந்துக்கள் அதற்கெதிராக எழுச்சி பெற்றனர். அவர்கள் பலவீனமடைந்த முகலாய பேரரசுக்கெதிராக கடும் தாக்குதல்களை மேற்கொண்டனர். மேலும், இராணுவ மயப்படுத்தப்பட்ட இந்து மதத்தினராகிய மகாராஷ்டிரர்களும் முகலாய பேரரசுக்கெதிராக கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர்.

அனைத்து இடங்களில் இருந்தும் பரவலான தாக்குதல்கள் மிகக் கடுமையாக நடத்தப்பட்டமையால் முகலாய பேரரசன் நிலை தடுமாறினான். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய பாரசீகர்கள், பலவீனமான வடமேல் பாதைகள் ஊடாக, இந்தியாவினுள் பிரவேசித்தனர். அவர்கள் ஊர்களையும் கிராமங்களையும் அழித்தபடி டில்லி நகருக்குள் ஆவேசமாகப் புகுந்தனர். அங்கிருந்த செல்வங்களைச் சூறையாடினர். தமது அதிகாரத்தை நிலைநாட்ட முயன்றனர். எனினும், அதிக நாட்கள் செல்லவில்லை. ஒருவருக்கொருவர் மோதியபடி அங்காங்கே குழுக் குழுவாகப் பிரிந்தனர். இதனால், இவர்களின் மிகப் பலவீனமான பிராந்திய அரசுகள் இந்தியா முழுவதும் தோன்றியன.

இதேவேளை, ஆங்கிலேயரும் பிரான்சியரும் ஒருவருக்கொருவர் கடும் பகைமை பாராட்டியபடி இருந்தனர். கி.பி.1711 இல் இவ்விரு நாட்டினருக்குமிடையே, ஐரோப்பாவில் கடும் யுத்தம் ஆரம்பமாகியது. தொடராக இந்தியாவிலும் அமெரிக்காவிலும் கூட இவ்விரு நாட்டினரும் கடுமையான யுத்தங்களில் ஈடுபட்டனர். கி.பி 1741 முதல் கி.பி 1748 வரையிலான காலப்பகுதியில் அவுஸ்திரேலிய நாட்டின்மீது உரிமை பாராட்டுவது சம்பந்தமாக பெரும் யுத்தமொன்று பிரான்சியருக்கும் பிரித்தானியருக்கும் இடையே நடைபெற்றது. அக்காலகட்டத்தில் ‘லா போர்டோனே’ எனும் பிரான்சிய கடற்படைத் தளபதியானவர், பிரித்தானிய வர்த்தக நகரமாகிய சென்னை மாநகரைக் கைப்பற்றினார். கி.பி. 1748 இல் சமாதானம் ஏற்பட்ட போது அந்நகரம் மீண்டும் ஆங்கிலேயரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தியாவிலும் பிராந்திய ராச்சியங்களிடையே யுத்தங்கள் ஏற்பட்டன. சில ராச்சியங்களில் உள்நாட்டுக் கிளர்ச்சிகளும் கலவரங்களும் தொடர்ந்து நடந்தவண்ணம் இருந்தன. மன்னர் ஒருவர் மரணமடைந்தால் அச்சிம்மாசனத்தைக் கைப்பற்ற பரஸ்பரம் பகைமை பாராட்டும் மன்னர்கள் பலர் ஒருவரோடு ஒருவர் கடும் யுத்தங்களில் ஈடுபட்டனர். இதனால், அக்காலகட்டத்தில் இந்தியா முழுவதும் யுத்தங்களால் அல்லோல கல்லோலப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடைய மாணவர்களுக்கு பரீட்சையின்போது உதவி வழங்க ஏற்பாடு

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றிற்குத் தோற்றவுள்ள விசேட தேவைகளையுடைய மாணவர்கள், பரீட்சையின் போது தமக்கான விசேட உதவிகளைப் பெறுவதற்கு எதிர்பார்ப்புகள் இருக்குமாயின், அத்தகைய மாணவர்களிடமிருந்து பரீட்சைகள் திணைக்களம் முன்கூட்டிய விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பத்தின் அடிப்படையில், அப்பரீட்சார்த்திகளுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என உறுதிப்படுத்தப்பட்டால், அவர்களுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன. இதனையிட்டு, குறித்த பரீட்சார்த்திகளுக்கு இது தொடர்பாக, பிரத்தியேகமான நேர்முகப் பரீட்சையொன்றும் நடத்தப்படவுள்ளது. மேற்படி நேர்முகப் பரீட்சைகள் கொழும்பு, கண்டி, கேகாலை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, குருநாகல், இரத்தினபுரி, தங்காளை, மாத்தளை, பதுளை, காலி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அம்பாறை, வவுனியா ஆகிய நகரங்களில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கான, விண்ணப்பப்படிவங்கள் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலதிக விபரங்களை 0112784208, 0112784537 அல்லது 1911 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெறமுடியும்.





# கண்ணீர் சிந்தி அழுவதாலும் நன்மை உண்டு!



உணர்ச்சிகளின் உச்சத்தில், அது சோகமாக இருந்தாலும் சந்தோஷமாக இருந்தாலும் கண்ணீர் கரை மீறுகிறது. சோகமாக இருந்தால் கண்ணீர் சிந்தி அழுகின்றோம். அதுவே, அதிகம் மகிழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களில் ஆனந்தக் கண்ணீர் சிந்துகின்றோம். மனம் விட்டுக் கண்ணீர் சிந்தி அழுவதால் மனதில் புதைந்திருக்கும் சோகத்தின் பாரத்தை அது குறைக்கிறது என்று இதுவரை கூறப்பட்டு வந்த நிலையில், கண்ணீரால் விளையும் ஒரு புதிய நன்மையைக் கூறுகிறது ஒரு புதிய ஆய்வு.

அதாவது, கண்ணீர் விட்டு அழுவது ஒருவரின் சுயகௌரவத்துக்கு ஊக்கம் அளிப்பதோடு, மனரீதியாக ஒரு தயார் நிலைக்கும் உதவுகின்றது என்று அந்த ஆய்வில் ஈடுபட்ட ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். அமெரிக்காவின் இண்டியானா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள்தான் இது குறித்து ஆராய்ந்திருக்கிறார்கள். கல்லூரி மட்டத்திலான கால்பந்தாட்டப் போட்டிகளை வைத்தே அவர்கள் இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். அதற்கமைய, போட்டிகளில் தோல்வியுறும்போது கலங்காத உறுதியான மாணவர்களைவிட, உடனடியாகக் கண்ணீர் சிந்தும் மாணவர்களுக்கு சுயகௌரவத்தின் அளவு அதிகமாக உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, கல்லூரி கால்பந்தாட்ட வீரர்கள் 150 பேரை ஆய்வுக்குட்படுத்தினர். அவர்களிடம், அழுகைக்கான வெவ்வேறு சூழ்நிலைகள் குறித்த விவரங்கள் கொடுக்கப்பட்டு, அவை தொடர்பான கருத்துக்கள் பெறப்பட்டன. அத்துடன், கால்பந்தாட்ட வீரர்கள் களத்தில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது, கண்ணீர் சிந்துவது போன்றவை ஆட்டத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன? என்பதிலும் இந்த ஆய்வாளர்கள் கவனம் செலுத்தினர். இந்த ஆய்வின் முடிவில் உணர்ச்சிகளை அடக்கி வைத்திருப்பதைவிட, அதைக் கண்ணீராக வெளிப்படுத்திவிடுவது நன்மை பயக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 432 வெளிநாட்டு மாணவர்கள்



2011 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு 432 வெளிநாட்டு மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆரம்பப் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு என்பனவற்றைக் கற்பதற்காகவே மேற்படி வெளிநாட்டு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அரச தரப்பு பிரதம கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அஜித் பெரேரா எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது;

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆரம்பப் பட்டத்திற்காக உள்ள பாடநெறிகளுக்கு 174 மாணவர்களும் பட்டப்பின் படிப்பு பாடநெறிகளுக்கு 258 மாணவர்களுமாக, மொத்தம் 432 வெளிநாட்டு மாணவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# இலங்கையில் அமில மழை...

எதிர்வரும் தினங்களில் இலங்கையில் அமில மழை பொழிவதற்கான அச்சம் நிலவுவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதி தலைமை வைத்திய அதிகாரி ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் பொழிந்த சில மழைவீழ்ச்சிகளில் அமில மழைக்குரிய சில தன்மைகளைக் காணக்கூடியதாக இருந்ததாக, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ரசாயனவியல் பிரிவினால் நடாத்தப்பட்ட புதிய ஆராய்ச்சி



யொன்றினூடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிவேக நகரமயமாக்கலின் காரணமாக, கொழும்பு மற்றும் கண்டி ஆகிய நகரங்களிலேயே இந்த அமில மழை முதலில் பொழிவதற்கான சாத்தியம் நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தப் பகுதிகளில் மனித உடலுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய வகையில் வளி மாசடைவதில் ஓரளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை அண்மைக்காலத்திலிருந்து அவதானிக்கப்பட்டு வருவதாகவும் இதனால் மனிதர்களுக்கு இருதயம் சார்ந்த நோய்கள், புற்றுநோய்கள், ஆஸ்துமா, பக்கவாதம், சிசுக் கருக்களுக்குப் பாதிப்பு போன்றவை ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் பிரதி தலைமை வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு
பெயர்/முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
அழகிய பேக் (Bag) ஒன்று Video CD வழிகாட்டி புத்தகம்.
அழகிய கைக்கடிகாரம் ( Watch ) ஒன்று அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன
எல்லா மாவணவ/மாணவிகளுக்கும். வழங்கப்படும்.
எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 081 222 77 11 / 0773 123 523


## வாசகர் முகம்

'விஜய்' முன் அட்டையில் இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்கள்
**ஹனா-ஸெய்னப்,**
ஸெண்டிஸ் வீதி, திக்குவல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரைப்பையில் ஏற்படும் Gastritis எனப்படும் வயிற்றுப்புண் அல்லது வயிறு எரிவு என்பது தற்போது வயது வேறுபாடின்றி அனைவரையும் பாதிக்கின்ற நோயாக உள்ளது. இந்த நோய்க்கு பல விடயங்கள் காரணமாக அமைகின்ற அதேவேளை, இந்த நோயை இனங்காண விசேட பரிசோதனையும் மேற்கொள்ளப் படுகின்றது. இதிலிருந்து தற்காத்துக்கொள்ள சரியான உணவுப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவது அவசியமாகும்




# தவறான உணவுப் பழக்கம் இரைப்பையைப் பாதிக்கும்

## உணவு சமிபாட்டுத் தொகுதியில் நோய்கள்

மனிதனின் சமிபாட்டுத் தொகுதியின் ஆரம்பம் வாய்ப்பகுதியாகும். நாம் உட்கொள்ளும் உணவுகளைத் துணிக்கைகளாக்கி, எச்சில் சுரப்பியின் ஊடாகக் கூழாக்கி, உணவு சமிபாடடைவதற்கு வாய்ப்பகுதி உதவுகின்றது. இதனால், உணவு இலகுவில் சமிபாடடைகின்றது. தொண்டைக் குழாயினூடாகப் பயணிக்கும் உணவு இரைப்பையிலும் சிறு குடல் மற்றும் பெருங்குடலிலும் சமிபாடு அடைகின்றது.

உணவு சமிபாட்டுச் செயற்பாட்டின் போது, உடலின் பல்வேறு பாகங்களில் பலதரப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன.



இதனை சமிபாட்டுத் தொகுதி சம்பந்தப்பட்ட நோய் என்று கூறுவர். பற்களில் ஏற்படும் நோய், தொண்டையில் ஏற்படும் தொற்றுக்கள், தொண்டைக் குழாய் புற்றுநோய், கல்லீரலில் பிரச்சினைகள், வயிற்றுப்புண், அமிலக் கோளாறுக்ள், சிறுகுடல்-பெருங் குடல் தொற்று, வயிற்றில் புற்று நோய், குருதிப்போக்கு, மலவாயிலில் ஏற்படும் மூலநோய் என்பன இவற்றில் சிலவாகும். இரைப்பையில் அமிலச் சுரப்பு அதிகமாக ஏற்படுவதனால், வயிற்றுப்புண் உண்டாகின்றது. அமிலம் வயிற்றில் அதிகம் சுரக்கப்பட பல்வேறு காரணங்கள் உள்ளன.

சரியான நேரத்திற்கு உணவு உட்கொள்வதனால் நான் ஆரோக்கியமாக இருக்கின்றேன்

## அதிக அமிலம் சுரப்பதற்கான காரணங்கள்

- உரிய நேரத்திற்கு உணவு உட்கொள்ளாமை.
- தவறான உணவுப் பழக்கவழக்கங்கள் (கொழுப்பு அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்ளல், நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுகளை உட்கொள்ளாமை, துரித உணவுகளை அடிக்கடி உட்கொள்ளல்).
- மன அழுத்தம்.
- மூட்டுவலிக்கும் மூட்டு வலி சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் பயன்படுத்தப் படும் வலி நிவாரணிகள் நீண்ட காலத்துக்கு உபயோகப்படுத்தப்படுவதனால்.
- இரைப்பையில் உருவாகும் 'ஃபைலேரியா' என்ற பக்ற்றீரியாவினால் இந்த நிலை ஏற்படக்கூடும்.
- நீண்ட நாட்களாகக் காணப்படும் நோய்களின் காரணமாகவும் ஏற்படலாம்.

## எவ்வாறு இதனை அறிந்து கொள்ளலாம்?

- வயிறு ஊதியிருப்பது போன்ற உணர்வு.
- வயிற்றின் மேற்பகுதியில் வலி.
- உணவின்மீது வெறுப்பு.
- நெஞ்சில் வலி அல்லது எரிவு.
- உணவு உண்டபின் தொண்டையில் இருப்பது போன்ற உணர்வு.
- உணவினை உட்கொள்ளும்போது தொண்டை அடைக்கும் உணர்வு.
- பசி குறைதல்.
- அதிகமாக அமிலம் தொண்டைக்கு வருதல்.




## இனம் காணும் பரிசோதனை

பலநோய் அறிகுறிகள் இருப்பின் அல்லது ஒரு நோய் அறிகுறி இருப்பின் நோயை சரியாக அறிந்துகொள்ள விசேட பரிசோதனை ஒன்று செய்யப்படவேண்டும். விசேட கெமரா ஒன்றினை இரைப்பைக்குள் செலுத்தியே, இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. இதனூடாக, இரைப்பையில் தொற்றுக்கள் ஏதும் உண்டா? என்பதனை ஆய்வுசெய்ய முடியும்.

## இந்த நோய் யாருக்கு ஏற்படுகின்றது?

இளம் வயதினருக்கே அதிகமாக வயிற்றுப்புண் ஏற்படுகின்றது. மன அழுத்தம், சரியான நேரத்திற்கு உணவு உட்கொள்ளாமை என்பன இதற்குக் காரணங்களாகும். வயதானவர்களுக்கும் சிறு பிள்ளைகளுக்கும்கூட இது ஏற்படலாம். சிறு பிள்ளைகள் சரியாக நீர் அருந்தாவிட்டாலும், நார்ச்சத்து உணவுகளை உட்கொள்ளாவிட்டாலும் இந்த நோய் ஏற்படக்கூடும்.

## உட்கொள்ளக்கூடாத உணவுகள்



அதிக உறைப்புடைய உணவுகள் மற்றும் துரித உணவுகள், கோதுமை மா உணவுகள், எண்ணெயில் வறுத்து அல்லது பொரிக்கப்பட்ட உணவுகள் தவிர்க்கப்பட வேண்டும். அமிலம் அதிகம் கொண்ட பானங்களை அருந்துவதனால், நோய் தீவிரமடையும். அதனால், செயற்கை நிறமூட்டிய மற்றும் சுவையூட்டிய பானங்களை அருந்துவதைத் தவிர்த்துக்கொள்வதே உகந்தது. மேலும், பால் உணவுகள் அதிகளவில் இரைப்பையில் தங்கியிருப்பதனால், இரைப்பையில் அமிலம் அதிகரிக்கின்றது. இதனால், பால், கொழுப்பு அதிகம் உள்ள உணவுகளை உட்கொள்வதனைத் தவிர்த்தல் அவசியமாகும்.

## அதிகம் உட்கொள்ள வேண்டிய உணவுகள்

அன்றாட உணவில் பச்சைக்கீரை வகைகள், நார்ச்சத்து மிக்க உணவுகள் அதிகம் உட்கொள்வதனால், வயிற்றுப்புண் ஏற்படுவதைக் கட்டுப்படுத்திக்கொள்ளலாம். அந்தவகையில், காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் என்பனவற்றை அதிகம் உட்கொள்ளல் வேண்டும்.




## வயிற்றுப்புண்ணைத் தவிர்த்துக்கொள்வதற்கு...

உரிய நேரத்தில் உணவுகளை உட்கொள்வதே இந்த நோயைத் தடுப்பதற்கான சிறந்த வழிமுறையாகும். 8-10 மணித்தியாலங்கள் வரை உணவின்றி இருத்தல் போன்ற காரணங்களினால் அமிலம் அதிகமாகச் சுரக்கப்படுகின்றது. இந்த அமிலம் திரண்டு கட்டியாகி விடுவதால் புண்கள் ஏற்படுகின்றன. இரைப்பை உட்சுவற்றுத் தசையில் அமிலம் மோதுவதால் இரைப்பை இழையங்களில் தொற்று ஏற்படவும் கூடும். அதனால், சரியான நேரத்திற்கு உணவினை உட்கொள்வது அவசியமாகும். அமைதியான மனநிலையில் இருப்பதும் இதற்குச் சிறந்த தீர்வாகும். இரைப்பையில் ஏற்படும் பக்ற்றீரியாக்களினால் உருவாகும் வயிறு எரிவுக்கு பக்ற்றீரியாக்களைக் கட்டுப்படுத்தும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும். இவை அனைத்தும் மருத்துவரின் ஆலோசனையின்படியே பெறப்பட வேண்டும்.

## வயிற்றுப் புண்ணுக்கு யோகட் உண்ணலாமா?

இந்த நோய்க்கு பால் மற்றும் யோகட் அருந்துவதால் சிறந்த பலன் உண்டு என்ற கருத்தும் உள்ளது. ஆனால், இது நபருக்கு நபர் வேறுபடுகின்றது. நோய் தீவிரமான நிலையில் பால் சம்பந்தப்பட்ட உணவினை உட்கொள்வது நோயினை மேலும் தீவிரப்படுத்தும். இரைப்பையில் உள்ள அமிலத்துடன், பாலில் உள்ள அமிலம் சேர்வதனால், இரைப்பையில் அமிலத்தின் அளவு அதிகரிக்கின்றது. இதனால், வயிற்றுப்புண்ணுடைய நோயாளிகளுக்கு பால் உணவு உகந்தது என்று கூறமுடியாது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

முகாமைத்துவம் - 112

கற்றலுக்கான ஆலோசனைகள்







# வேகமும் விவேகமும் மாணவர்களுக்கு அவசியம்

எந்தவொரு செயலைச் செய்வதாக இருந்தாலும், அச்செயலை ஆரம்பிப்பதிலிருந்து முடிக்கும்வரையும் பல்வேறு உத்திகளைக் கையாள வேண்டியுள்ளதோடு, அவற்றை நுட்பமாகவும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான முறைமையை செயல்வழிக்குக் கொண்டு வரும்போது, வேகமாக செய்ய வேண்டும். செயல்களை தாமதப்படுத்துவதானது, நேரத்தை வீணடிக்கச் செய்யும். அத்துடன், நாம் செய்யும் செயலில் வேகம் இருப்பினும் அந்த வேகத்தை விவேகத்துடன் செயற்படுத்த வேண்டும்.

அந்தவகையில், கல்விச் செயற்பாட்டிற்கு வேகம், விவேகம் என்பன முக்கிய தூண்களாக உள்ளன.

புத்திசாலி என நினைத்து இவை இரண்டில் ஒன்றை மட்டும் தூக்கிப் பிடித்துக்கொள்ளக் கூடாது. வேகத்தையும் விவேகத்தையும் ஒன்றாகச் செயற்படுத்த வேண்டும்.

சில மாணவர்களைப் பொறுத்தவரையில், பாடங்களை விரைவாகக் கற்க வேண்டும்,தனது நண்பனைவிட விரைவாகப் படித்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தில், பாட விடயத்தை அதன் உட்பொருளை விளங்காமல் வேகமாக மேலெழுந்தவாரியாகக் கற்றுக்கொள்வர். எனினும், இவ்வாறு கற்பதனூடாக, பாடத்தை விரைவாகக் கற்று முடித்து விடலாம். ஆனால், அவர்கள் பாடத்தில் கூறப்படும் விடயங்களைப் பூரணமாக விளங்காதவர்களாகவே இருப்பார்கள். எனவே, கற்றலில் வேகம் மட்டும் போதாது; அதனுடன் சேர்ந்த விவேகமும் அவசியம்.

பெரும்பாலான மாணவர்கள் தாம் கற்கும் வேகத்தை அதிகரிப்பது பரீட்சை நேரத்தில்தான். பரீட்சை நெருங்கும் காலத்தில் முழுவதையும் அன்றே படித்துவிட வேண்டும் என்று மிகவும் வேகமாகக் கற்க நினைப்பர். ஆனால், இங்கு வேகம் இருந்து எவ்வித பயனுமில்லை. மாறாக, பரீட்சைக்கு முன்னரே, முழுவதையும் கற்றுக்கொள்ளும் விவேகம் மாணவர்களிடத்தில் இருக்க வேண்டும்.

இதற்கமைய, பரீட்சை எழுதும்போது, செல்வாக்குச் செலுத்தும் முக்கிய அம்சங்களாக வேகமும் விவேகமும் உள்ளன. பரீட்சையில் புள்ளிகளைக் குறைவாக எடுப்பதற்கு முக்கிய காரணம்; இவ்விரு அம்சங்களுக்கிடையிலான பிரிவினையே ஆகும். உதாரணமாக; பரீட்சையை விரைவாக எழுத வேண்டும் என நினைத்து மாணவரொருவர் விடைத்தாளில் வினா இலக்கம், சுட்டெண் என்பனவற்றை எழுதாமல் இருப்பாராயின், அங்கு அவர் வேகமாக எத்தனை விடைத்தாள்களை எழுதினாலும் பயனில்லை. ஏனெனில், அவர் வேகமாக விடையளித்திருந்தாலும் விடைத்தாளில் இடம்பெற வேண்டிய முக்கிய விடயங்களை (வினா இலக்கம், சுட்டெண்) அவர் எழுதாமல் விட்டமையால், விவேகமாக செயற்படவில்லை என்றே கருத வேண்டும்.

ஆகவே, எந்தவொரு காரியத்தைச் செய்வதாயிருப்பினும், அதனை வேகத்தோடும் விவேகத்தோடும் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் முழுப் பயனையும் திருப்தியையும் அடைய முடியும்.


(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**



# வான்கோழியின் தோற்றத்திலான டைனோசர் எச்சம் கண்டுபிடிப்பு

*வான்கோழி போன்ற தோற்றத்தினை உடைய, எட்டு அடி உயரம்கொண்ட- பறக்க இயலாத டைனோசர் இனமொன்றின் எச்சம் அண்மையில் ஆர்ஜன்டினாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது பறவைகளின் 'மூதாதை இனம்' என்றே கருதப்படுகின்றது. 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட எச்சமொன்றே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வான்கோழி போன்ற உருவத்தினைக்கொண்ட இந்த எச்சத்துடன், முட்டைகள் தொகுதியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது*



கண்டுபிடிக்கப்பட்ட டைனோசர் எச்சத்திற்கமைய, வரையப்பட்ட சித்திரம்.

டைனோசர்கள் எவ்வாறு பறவைகளாக மாறின என்பதனை அறிந்துகொள்வதற்கு இந்தக் கண்டுபிடிப்பு உதவும் என்று விஞ்ஞானிகள் மேலும் கூறுகின்றனர். 'பொனபார்ட்டெனிகுஸ் அல்ட்டிமஸ்' (Bonaparteny kus Ultimus) என்று இந்த டைனோசர் இனங்காணப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகளினூடாக, இந்த உயிரினத்துக்கும் தற்போதுள்ள பறவையினங்களுக்கும் இடையிலான உறவுமுறையினை விளங்கிக் கொள்ள முடியும் என்று இதன் எலும்புத் தொகுதிகளை ஆய்வு செய்துவருகின்ற விஞ்ஞானியான பெர்னாண்டோ நொவாஸ் கூறுகின்றார்.

''காலத்தின் கோலத்திற்கு ஏற்ப இவற்றின் கைப்பகுதிகள் நீண்டுள்ளன. அத்துடன், வேகமாக ஓடக்கூடியவாறு பாதங்கள் மாறிவிட்டன. இரைகளைப் பற்றிப் பிடிக்கவே இவற்றின் கைகள் முன்பு உதவியுள்ளன. இறுதியில் இந்தக் கைப்பகுதி இறக்கைகளாகவும் டைனோசர் செதில்கள் இறகுகளாகவும் மாறிவிட்டன. முற்காலத்தில் எரிகற்கள் பூமியில் மோதியதால் பெரும்பாலான டைனோசர்கள் பூமியில் இருந்து முற்றாக அழிந்திருக்கின்றன.அப்போது, தாவர உண்ணி டைனோசர்கள் சில இந்த ஆபத்தில் இருந்து தப்பிப் பிழைத்திருக்கக்கூடும். அவைதான் இன்று பறவைகளாக மாறியிருக்கக் கூடும்'' என்று நொவாஸ் மேலும் தெரிவிக்கின்றார்.

படிம ஆய்வு விஞ்ஞானிகளுக்குக் கிடைத்துள்ள இந்த உயிரினத்தின் எச்சத்தினை ஆராய்ந்ததில், இந்த புதிய உயிரினம் நீண்ட கால்களைக் கொண்ட, வேகமாக ஓடக்கூடிய 'அல்வாரெஸ்ஸெளரிட்' (Alvareszaurid) எனும் டைனோசர் குடும்பத்தைச் சேர்ந்தது என்று தற்போது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இந்த எச்சத்துடன் கிடைத்துள்ள அதன் முட்டைகளுக்குள் கருவும் உருவாகியிருந்துள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். சில முட்டைகள் டைனோசர் தாய் இறக்கும்போது, அவற்றின் வயிற்றுக்குள் இருந்துள்ளதுடன், ஏற்கனவே இடப்பட்ட முட்டைகள் அழிவடையாமல் எச்சத்தின் அருகிலிருந்தவாறே விஞ்ஞானிகளுக்குக் கிடைத்துள்ளன.

இந்த உயிரினத்திற்கு 'பொனபார்ட் டெனிகுஸ் அல்ட்டிமஸ்' என்று பெயர் சூட்டப்பட்டதன் காரணம், அல்வாரெஸ்ஸெளரிட் டைனோஸர் குடும்பத்திற்குரிய முதலாவது உயிரினத்தை 1990 களில் கலாநிதி ஜோசப் பொனபார்ட் என்பவர் கண்டுபிடித்திருந்தமையாகும். ஆகவே, அவருக்கு மரியாதை செய்யும் நோக்கத்துடனேயே, இந்த உயிரினத்துக்கு 'பொனபார்ட் டெனிகுஸ் அல்ட்டிமஸ்' எனும் பெயர் சூட்டப்பட்டது.

தற்போது இந்த டைனோசர் எச்சத்திற்குரிய முட்டைகள் சக்திவாய்ந்த நுணுக்குக்காட்டியினூடாக ஆய்வுசெய்யப்பட்டு வருகின்றன. சில முட்டைகளில் பங்கஸ் தொற்று ஏற்பட்டுள்ளதனால், பாதிப்படைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. முற்காலத்தில் தென் அமெரிக்காவின் தெற்கு நோக்கிய பகுதியான கோண்ட்வானாவில் இவை வாழ்ந்திருக்கக்கூடும் என்று கூறப்படுகின்றது.இன்று ஆர்ஜன்டீனாவின் ரியோ நெக்ரோ பிராந்தியத்தின் ஒரு பகுதியாக இந்த இடம் உள்ளது. (இ)



70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆர்ஜன்டீனாவில் வாழ்ந்த புதிய டைனோசர் இனத்தின் எச்சம்.




இன்றைய பறவைகளுக்கு உறவு முறையாக உள்ள டைனோசர் எச்சம் ஒன்று.



படிம ஆராய்ச்சி விஞ்ஞானியான பெர்னான்டோ நொவாஸ் ஓர் எச்சத்தை ஆய்வு செய்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## போஷாக்கு குறைவடைந்தால், நோய்களும் அதிகரிக்கும்!

எமது உடற் செயற்பாடுகள் முறையாக செயற்படுவதற்கு சிறந்த போஷாக்கு அவசியமாகின்றது. உணவில் உள்ள போஷணைப் பதார்த்தங்களின் ஊடாக, உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்கின்றது. உடலின் வளர்ச்சிக்கும் உடற் செயற்பாட்டின்போது விரயமாகின்ற சக்தியினை மீளப் பெற்றுக்கொள்வதற்கும் போஷாக்குத் தேவைப்படுகின்றது. அத்துடன், உடலில் ஏற்படும் நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறவும் நோய் எதிர்ப்புச்சக்திக்கும் போஷாக்கு மிக, மிக அவசியமாகின்றது.

### போஷாக்கின்மை

உணவினை உட்கொண்டபின்னர் அவை உடலினுள் சமிபாடடைந்து உடலுக்குத் தேவையான போஷாக்குப் பதார்த்தங்கள் அகத்துறிஞ்சப்படுகின்றன. உடலினுள் அகத்துறிஞ்சப்படும் போஷாக்குப் பதார்த்தங்களினால் உடல் அதற்கேற்றவாறு செயற்படுகின்றது. உடலுக்குப் போதியளவு உணவு கிடைக்காதபட்சத்தில் சமிபாட்டுத் தொகுதி செயலிழந்து உடலுக்குத் தேவையான போஷாக்குக் கிடைக்காமல் போய்விடுகின்றது. இதனால், உடலினுள் பலவிதமான போஷாக்கின்மை சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு உடலுக்கு ஏற்ற போஷாக்கான உணவுகளை நாம் உட்கொள்ள வேண்டும்.

### சிறு பிள்ளைகளைப் பாதிக்கும் போஷாக்கின்மைப் பிரச்சினைகள்

தாயின் வயிற்றில் இருக்கும் சிசுக்களுக்குப் போதுமானளவு போஷாக்குக் கிடைக்காவிட்டால், அவை நிறை குறைந்த பிள்ளைகளாகப் பிறக்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனால், இக் குழந்தைகள் போஷாக்கின்மையினால் பாதிப்புறுகின்றன. இரும்புச்சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் குருதிச்சோகை, உயரத்திற்கு ஏற்ற நிறையின்மை, விற்றமின் குறைபாடுகள், நிறை குறைவால் ஏற்படும் தொற்று அல்லாத நோய்கள் என்பன ஏற்படுவதற்கு இந்த போஷாக்கின்மை குறைபாடு மிக முக்கிய காரணமாக அமைகின்றது.

### விற்றமின் 'A' குறைபாடு

பரவலாக இந்த விற்றமின் A குறைபாடு காணப்படுகின்றது. இந்த விற்றமின் உடலுக்கு இன்றியமையாததாகும். விற்றமின் A குறைபாடு உடலில் பல நோய்களை ஏற்படுத்துகின்றது. பிரதானமாக பார்வைக் குறைபாட்டை ஏற்படுத்துகின்றது. மாலைக்கண், கண்களில் புரைகள் ஏற்படல், நோய் எதிர்ப்புச் சக்தி குறைவடைதல், சருமம் சொரசொரப்படைதல் ஆகிய பிரச்சினைகள் ஏற்படக்கூடும். மஞ்சள் நிறக் காய்கறிகள், பழங்கள், பச்சைக் கீரை வகைகளை உண்ணாமையும் அல்லது அதனைக் குறைவாக உட்கொள்வதாலும் விற்றமின் A குறைபாட்டினால் பாதிக்கப்பட நேரிடுகின்றது.

### மந்த போஷணை

ஒவ்வொருவரினதும் போஷாக்கு மட்டங்கள் வேறுபடுகின்றன. பெறப்படும் உணவுகளின் வகையினைப் பொறுத்தே இந்த வேறுபாடு ஏற்படுகின்றது. போஷாக்கின்மையும் அதிபோஷாக்கும் பிரச்சினைக்குரியனவாகும். அவை நோய்க்காரணியாகவும் அமைகின்றன. காபோஹைதரேட், புரோட்டீன், விற்றமின் மற்றும் கனியுப்புகள்



## போஷாக்கு மட்டங்கள் மாறுபடும் சந்தர்ப்பங்கள்

**✱ வயதுக்கேற்ப:**



ஒவ்வொரு வயதுக்கு ஏற்ப போஷாக்கு மட்டமும் மாறுபடுகின்றது. எடுத்துக்கொள்ளும் உணவின் அளவும் வேறுபடுகின்றது. குழந்தைப் பருவம், முன்பள்ளிப் பருவம், சிறுவர் பருவம், இளம் பருவம், வயது வந்த பருவம், வயோதிப பருவம் ஆகிய மட்டங்களில் போஷாக்கு மட்டத்திலும் மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

**✱ ஆண், பெண் வேறுபாடு:**



ஆண்களுக்கும் பெண்களுக்கும் போஷாக்கு மட்டம் வேறுபடுகின்றது.

**✱ வேலை முறைகளுக்கேற்ப:**



ஒவ்வொரு நபரின் தொழில் இயல்புக்கேற்ப உடல், மனம் சார்ந்த சக்திகள் வேறுபடும். இவ்வாறு செலவாகும் சக்திக்கு ஏற்ப பெறப்படும் போஷாக்கு மட்டத்திலும் மாறுபாடுகள் உள்ளன.

**✱ சூழல் காரணிகளுக்கேற்ப:**



காலநிலை மாற்றத்தின் அடிப்படையிலும் ஒவ்வொரு நபர்களின் உணவு முறைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. குளிர் மற்றும் வெப்பமுடைய காலநிலை இதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. வெள்ளப்பெருக்கு, வறட்சி ஆகிய காலநிலை மாற்றங்களின்போது, நிகழும் சூழல் வேறுபாடுகள் நபர்களின் உணவு முறையிலும் மாற்றத்தினை ஏற்படுத்தும்

**✱ பொருளாதார நிலைக்கு ஏற்ப:**



அனைவரினதும் உணவுக்கான தேவை பொதுவாக இருந்தாலும் ஒவ்வொருவரினதும் பொருளாதார மட்டத்திற்கு ஏற்ப உணவு மட்டமும் வேறுபடுகின்றது. நகரவாழ் மக்களைவிட, கிராமிய மக்கள் போஷாக்கு அதிகமுள்ள உணவுகளை உட்கொள்கின்றனர்.

**✱ பலதரப்பட்ட நோய்கள் காரணமாக:**

நோய்களால் பீடிக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில் போஷாக்குத் தேவைகளும் மாறுபடுகின்றன. எச்.ஐ.வி. மற்றும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு சாதாரண நபர்களின் போஷாக்கு மட்டம் பொருந்தாது. இவற்றைத்தவிர, பலதரப்பட்ட அவநம்பிக்கைகளும், கலாசார வேறுபாடுகளும் உணவு மட்டத்தினை வேறுபடுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போஷாக்கு குறைவடைந்தால், நோய்களும் அதிகரிக்கும்!








உடலில் குறைவடைவதனால், மந்தபோஷணை நிலைமை உருவாகின்றது. இதனால், உடல் மிகவும் பலவீனமடைவதுடன், பல்விதமான சிக்கல்களும் ஏற்படுகின்றன. ஆரோக்கியமானவர்களைவிட, மந்த போஷணை உடையவர்களின் செயற்பாடுகள் பெரிதும் வேறுபடுகின்றன. இதனால் வாழ்க்கையின் அன்றாட செயற்பாடுகள், கல்வி நடவடிக்கைகள், தொழில் என்று அனைத்தும் பாதிக்கப்படுகின்றன.

## இரும்புச்சத்துக் குறைபாடு

உடலில் குருதிச்சோகை ஏற்படுவதற்கு இரும்புச்சத்துக் குறைபாடு காரணமாக இருக்கின்றது ஆரோக்கியமானவர்களின் உடலில் சரியானளவு இரும்புச்சத்து இருப்பதுடன், அதனூடாக உடலுக்குத் தேவையான ஹீமோக்ளோபின் உற்பத்தியும் நிகழ்கின்றது. உடலில் ஒவ்வொரு பாகத்திற்கும் தேவையான ஒட்சிசனை இந்த ஹீமோக்ளோபின் எடுத்துச் செல்கின்றது. இரும்புச்சத்துக் குறைபாட்டினால், உடலினுள் இந்த செயற்பாடு சரியான முறையில் செயற்பட மாட்டாது. அத்துடன், உடலின் வளர்ச்சி வேகமும் பாதிக்கப்படுகின்றது. நினைவாற்றல் குறைவடைகின்றது. இலகுவில் களைப்படையும் நிலை ஏற்படுகின்றது. எனவே, உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியினை அதிகரிக்கவும் உடல் ஆரோக்கியத்திற்கும் இரும்புச்சத்து உடலுக்கு இன்றியமையாததாகும்.

## உடற்பயிற்சியின் அவசியம்

சிறப்பான உடற் செயற்பாட்டிற்கு நாள்தோறும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது அவசியமாகும். நாம் உட்கொள்ளும் உணவுகள் சமிபாடடைய இந்த விடயம் நேரடியாக உதவுகின்றது. உடற்பயிற்சிகளில் ஈடுபடாதவர்கள் இலகுவில் நோய்வாய்ப்படுவர். பாடசாலை செல்லும் பிள்ளைகள் நாளாந்தம் 2 மணித்தியாலங்கள் ஏதேனும் விளையாட்டுக்களில் ஈடுபடுவது நன்மை தரும். உடற்பருமன் காரணமாக, பாடசாலைப் பிள்ளைகள் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். உடல் சக்தியினை விரயப்படுத்திக்கொண்டு விளையாட்டுக்கள் மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதனால், எலும்புகள் பலமடையும் தசைகளின் செயற்பாடுகள் சிறப்பாகக் காணப்படும்.

## போஷாக்கு மிக்க உணவுகள்

உடல் ஆரோக்கியத்தினைப் பேண வேண்டுமாயின், போஷாக்கான உணவுகளை உட்கொள்ள வேண்டும். உடற்பலம், வளர்ச்சி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்குத் தேவையான போஷாக்குகள் அனைத்தும் நாம் உட்கொள்ளும் உணவில் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

உடலுக்குச் சக்தியை அளிக்கும் இயற்கை உணவுகள், தானியங்கள், கிழங்கு வகைகள், பலா, ஈரப்பலா என்பனவும் உடல் வளர்ச்சிக்கு மீன், இறைச்சி, கருவாடு, கௌபீ, பால், கடலை என்பனவும் உடலை நோய்களில் இருந்து காப்பாற்றிக்கொள்ள காய்கறிகள், பழவகைகள், கீரைகள் என்பனவற்றையும் உட்கொள்ளலாம். உணவு தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் இயற்கை சுவையூட்டிகள், வாசனைத் திரவியங்கள் என்பனவும் மருந்துகளாக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## ஆரோக்கியத்திற்கு எதிரான உணவுகள்

தவறான உணவுப் பழக்கங்கள் உடலில் ஆரோக்கிய சீர்கேட்டினை ஏற்படுத்துகின்றன. எண்ணெய், சீனி, உப்பு அதிகம் கொண்ட உணவுகளை நீண்டகாலம் உட்கொள்வதனால், உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகின்றது. உயர் குருதி அழுத்தம், நீரிழிவு நோய், இதய நோய்கள் ஆகிய தொற்று அல்லாத நோய்கள் பல ஏற்படுவதற்கு தவறான உணவுப் பழக்கமே காரணமாக அமைகின்றது,

துரித தயாரிப்பு உணவுகளும் உடலுக்குக் கேடு விளைவிக்கும் என்றே கூறமுடியும். இவ்வாறான உணவுகளில் அதிக மாச்சத்து உள்ளது. இவற்றை அதிகம் உட்கொள்வதனால் உடற்பருமன் அதிகரித்து பல நோய்கள் ஏற்படுகின்றன. உடலுக்குத் தேவையான உடற்பயிற்சி இன்மையால் நோய் தீவிரமடையக்கூடும்.

இவற்றுடன், இனிப்பு மிட்டாய், சொக்லேட், இனிப்புப் பானங்கள், செயற்கை சுவையூட்டிகளுடைய உணவுகள் என்பனவற்றை அதிகளவில் உட்கொள்வதும் ஆரோக்கியத்திற்குப் பாதிப்பினை ஏற்படுத்தும்.

## சரியான போஷாக்கின் முக்கியத்துவம்

நிறைகுறைந்த பிள்ளைகளின் பிறப்பு பிரதான போஷாக்கின்மைப் பிரச்சினையாகும். இதனால், இந்த நிறைகுறைந்த பிள்ளைகள் வளர, வளர நோய்களினால் பீடிக்கப்படும் வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன. சரியான போஷாக்குகளைப் பெறாத குழந்தைகள் உடல் ரீதியில் மட்டுமன்றி; உள ரீதியிலும் பலவீனமடைகின்றன. இவர்களின் செயற்பாடுகள் அனைத்தும் மந்தகதியில் இருக்கும். இது நாட்டின் எதிர்காலத்திற்குப் பாதிப்பினை ஏற்படுத்துவதுடன், கல்வி, தொழில் நடவடிக்கைகளிலும் பாதிப்பினை ஏற்படுத்திவிடும். சரியான போஷாக்கு மட்டம் கொண்ட ஆரோக்கியமானவர்கள் இருக்கும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியும் சிறந்து விளங்கும்.

## அயடின் சத்துக் குறைபாடு

மூளை வளர்ச்சிக்கும் புத்தி மட்ட வளர்ச்சிக்கும் அயடின் கனியுப்பு அவசியமானதொன்றாகும். அயடின் குறைபாட்டினால் தொண்டைக் கழலை ஏற்படும். உதாசீனம், துரிதமாகக் களைப்புறல், மூளை வளர்ச்சிக் குறைபாடு, புத்தி மட்டக் குறைபாடு, உடல் வளர்ச்சிக் குறைபாடு ஆகிய நோய்கள் மற்றும் உடல் குறைபாடுகள் ஏற்படும். அயடின் குறைபாட்டினால் முன்பள்ளிச் சிறார்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். தகவல்களின் படி, 8 முதல் 10 வயதுவரையான பிள்ளைகளில் 3.8 சதவீதமானவர்கள் அயடின் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## அதிபோஷாக்கும் பிரச்சினையே!

உயரத்திற்கு ஏற்ப நிறை அதிகரித்திருப்பதும் ஆரோக்கியப் பிரச்சினையை ஏற்படுத்தும். இந்த உடற்பருமன் காரணமாக, உடல் உள்ளம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சோம்பல், அடிக்கடி நோயுறல் என்பன உடல் நிறை அதிகமானவர்களுக்கு உள்ள பிரச்சினையாகும். உடலுக்குத் தேவையான போஷாக்கு அதிகரிக்கும்போது, உடற்பருமன் ஏற்படுகின்றது. இவ்வாறானவர்களுக்கு தொற்று அல்லாத நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, இதய நோய் என்பன இவர்களுக்கு ஏற்படும். இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது அவசியமாகும். எண்ணெய், சீனி, மாச்சத்துக் கொண்ட உணவுகளைக் கட்டுப்பாட்டுடன் அளவாக உட்கொள்வது மிகவும் அவசியமாகும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோல்டோவா




**அரசு:** நாடாளுமன்றக் குடியரசு.

**ஒருங்கிணைப்பு:** தனி அதிகாரப் பிரகடனம் - 23 ஜூன் 1990; சோவியத் யூனியனிடமிருந்து சுதந்திரப் பிரகடனம் - 27 ஓகஸ்ட் 1991; மோல்டோவா அரசியலமைப்பு - 29 ஜூலை 1994.

**தேசிய பெயர்:** ரிபப்ளிக்கா மோல்டோவா.

**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய ஓகஸ்ட் 27.

**ஜனாதிபதி** (2012): நிக்கோலே டிமோஃப்டி.

**பிரதமர்** (2009): விலாட் ஃபிலட்.

## புவியியல்

தேசிய இலச்சினை



மோல்டோவா முற்றிலும் நிலங்களால் சூழப்பட்ட கடற்கரையற்றதொரு நாடாகும். இதன் கிழக்கு மற்றும் தெற்கில் உக்ரைன் நாடும் மேற்கில் ருமேனியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. கார்பேதியன் மலைகளுக்குக் கிழக்கே மலைகளையும் சமவெளிகளையும் கொண்டுள்ள மோல்டோவா நாடானது, ப்ருட் மற்றும் ட்னைஸ்டர் ஆகிய நதிகளுக்கிடையே அமைந்துள்ளது. நாட்டின் முக்கால்வாசி நிலப்பரப்பில் வளம் நிறைந்த கருநிற மண் காணப்படுகின்றது.









**மொத்தப்பரப்பு:** 13,067 ச.மைல் (33,843 ச.கி.மீற்றர்).

**நிலப்பரப்பு:** 12,885 ச.மைல் (33,371 ச.கி.மீற்றர்).

**நிலப்பிரிவுகள்:** 10 பிராந்தியங்கள், 1 மாநகராட்சி, 1 சுயாட்சிப் பிரிவு.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** கிஷினொவ்.

**உயர் மலைச்சிகரம்:** டலல் பெலனெஸ்டி (430 மீற்றர்).

**தாழ்மையம்:** ட்னைஸ்டர்.

**மக்கள் தொகை** (2012): 3, 656, 843.

**நாணயம்:** லியு.

**மொழிகள்:** மோல்டோவன், ரஷ்யன், ககவுஸ் (ஒரு துருக்கிய உரையாடல் மொழி).

**இனக்குழுவினர்கள்** (2004): மோல்டேவியன்/ருமேனியன் 78.2%, உக்ரேனியன் 8.4%, ரஷ்யன் 5.8%, ககவுஸ் 4.4.%, பல்கேரியன் 1.9%, யூதர் 1.5%, பெப்டிஸ்ட் மற்றும் ஏனையோர் 0.5%.

**எழுத்தறிவு** (2005): 98.6%

**இணையத்தளக் குறியீடு:** .md

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 373

**தேசிய கீதம்**

Limba noastră-i o comoară
În adîncuri înfundată
Un °irag de piatră rară
Pe mo°ie revărsată... என

ஆரம்பமாகின்றது.

## வரலாறு

முன்னர் 'மோல்டேவியா' என அழைக்கப்பட்ட இன்றைய மோல்டோவா, 14 ஆம் நூற்றாண்டு வரை சுதந்திரக் காற்றையே சுவாசித்து வந்தது. 16 ஆம் நூற்றாண்டில் ஒட்டோமன் துருக்கியரின் ஆட்சியின்கீழ் வந்தது. 1812 இல் மோல்டேவியாவின் ஒரு மாகாணமாகிய பெஸ்ஸரேபியாவை துருக்கி ரஷ்யாவிற்கு கையளித்தது. 1918 இல் மோல்டேவியாவை துருக்கி ருமேனியாவிற்கு கையளித்தது. எனினும், ரஷ்யா அதனை அங்கீகரிக்கவில்லை.

1924 இல் ரஷ்யா தனது ஐக்கிய சோவியத் சமவுடமை குடியரசில் மோல்டேவியாவையும் இணைத்துக்கொண்டது. இரண்டாம் உலக யுத்தத்தின்போது, ருமேனியா ஜேர்மனியுடன் இணைந்து சோவியத் ரஷ்யாவிற்கு எதிராகப் போர்தொடுத்து பெஸ்ஸரேபியாவைத் தன் வசப்படுத்தியது. எனினும், சோவியத் துருப்புகள் மீண்டும் அதனைக் கைப்பற்றி 1944 இல் மோல்டேவியன் சோவியத் சமவுடமைக் குடியரசை நிறுவியது.

அதன்பின்னர் பல வருடங்களாக பெஸ்ஸரேபியாவை தன் வசப்படுத்தும் முயற்சியில் ருமேனியாவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றின. 1991 இல் மோல்டேவியா ரஷ்யாவிடமிருந்து சுதந்திரம் பெற்றதோடு, நாட்டின் பெயரும் ருமேனிய உச்சரிப்பின்படி 'மோல்டோவா' என மாற்றம் பெற்றது.


சொரோகா கோட்டை


மோல்டோவன் நாடாளுமன்றம்

## காலநிலை

கருங்கடலிற்கு மிக அருகில் உள்ள மோல்டோவா, பொதுவாக வெப்பமான கோடையைக் கொண்டது.இக்காலகட்டத்தில் சராசரியாக 20° செல்சியஸ் வெப்பநிலை நிலவும். மாரிகாலத்தில் இதமான குறைந்த வெப்பநிலை நிலவும். கோடையின் ஆரம்பத்தில் அதிக மழை வீழ்ச்சி காணப்படும்.




## கலாசாரம்

மொல்டோவா கலாசாரமானது, முற்றாக ருமேனிய மற்றும் சோவியத் கலாசாரங்களின் வெளிப்பாடாகவே காணப்படுகின்றது. பாரம்பரிய லத்தீன் வழித்தோன்றலாகிய ருமேனிய கலாசாரம், ரோமானிய குடியேற்றம் நிலவிய 2 ஆம் நூற்றாண்டில் இங்கு தோன்றியது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2010): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 1.161 மில்லியன்; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 3.165 மில்லியன். **தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையங்கள்** (2007): அரச தொலைக்காட்சி நிறுவனங்கள்-2, பிராந்திய தொலைக்காட்சி அலைவரிசைகள்-40. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்:** அரசுக்குரிய தேசிய வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்-02; பிராந்திய வானொலி நிலையங்கள் - 50. **இணையத்தள வழங்குனர்கள்** (2011): 696, 685; இணையத்தளப் பாவனையாளர்கள்: 1.333 மில்லியன்.




## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2010): மொத்தம் 1,190 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2004): மொத்தம் 9,343 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்துகள்** (2008): 558 கி.மீற்றர்.


ஜனாதிபதி


பிரதமர்


தலைநகரின் ஒரு பகுதி

**விமான நிலையங்கள்** (2010): 11.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 54.52%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** மரக்கறி வகைகள், பழவகைகள், வைன், தானிய வகைகள், சூரியகாந்தி விதை, புகையிலை, மாட்டிறைச்சி, பால். **கைத்தொழில்கள்:** சீனி, மரக்கறி எண்ணெய், உணவு உற்பத்திப் பொருட்கள், விவசாய இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், பாதணிகள், புடவை. **இயற்கை வளங்கள்:** பொஸ்பரேற், ஜிப்சம், பயிர்ச்செய்கை நிலம், சுண்ணக்கல். **ஏற்றுமதிகள்** (2011): உணவுப் பொருட்கள், இயந்திரங்கள். **இறக்குமதிகள்** (2011): கனிப்பொருட்கள், எரிபொருட்கள், இயந்திரங்களும் இயந்திர உதிரிப்பாகங்களும், ரசாயனப் பொருட்கள், புடவை வகைகள். **பிரதான வர்த்தகப் பங்காளிகள்** (2011): ரஷ்யா, இத்தாலி, ருமேனியா, ஜேர்மனி, உக்ரைன், ஐக்கிய ராச்சியம், துருக்கி, சீனா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- மோல்டோவா தேசிய வரலாற்றியல் அருங்காட்சியகம்
- சொரோகா கோட்டை
- Orheiul Vechi பழங்காலக் குடியிருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நான்கு நண்டினங்கள் பிலிப்பைன்ஸ் தீவில் கண்டுபிடிப்பு


அழிந்து போகும் அபாயத்தில் உள்ள ஊதா நிற நண்டு.

ஊதா நிறமுடைய புதிய நண்டினங்கள் பிலிப்பைன்ஸ் தீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பிலிப்பைன்ஸ் தீவின் பலவான் தீவுக்குரிய தனிச்சிறப்புமிக்க நண்டினங்களாகும். பல தரப்பட்ட அகழ்வுப்பணிகள் காரணமாக, அவை தற்போது அழிந்துவிடும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளன.

சுன்டைக் மற்றும் பிலிப்பின் பிராந்தியத்திற்கு இடையேதான் இந்தப் பலவான் என்ற பகுதி அமைந்திருக்கின்றது. உலகில் அதிகமான தனிச்சிறப்புமிக்க உயிர்ப்பல்வகைமையினைக் கொண்ட இரண்டு பகுதிகளை இந்தப் பலவான் என்ற பகுதி இணைக்கின்றது. பலவான் பகுதியில் வசிக்கும் 50 சதவீதமான உயிரினங்கள் அழிந்துபோகும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளன. இவை அந்தத் தீவுக்கே உரிய உயிரினங்களாகும்.

''அக்வா பலவான் என்ற ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் எனது தலைமையிலேயே நடைபெறுகின்றது. நாம் இந்தப் பலவான் தீவின் உள்ளே உவர்நீர் உயிர்ப்பல்வகைமைத்துவம் குறித்து 10 ஆண்டுகளாக ஆய்வுசெய்து வருகின்றோம்'' என்று ட்ரெஸ்டென் சென் கென்பர்க் இயற்கை விஞ்ஞான வரலாற்று அருங்காட்சியகத்தின் கலாநிதி ஹென்றிக் ப்ரீடெக் கூறுகின்றார். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்;

''இங்கு 'இன்சுலமன்' நண்டுகளை மிகவும் நெருக்கமாக இருந்து ஆய்வு செய்யும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது. இதன்போது, புதிய நான்கு வகை உயிரினங்களை எங்களால் கண்டுபிடிக்க முடிந்தது'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.


இது நண்டினம் பலவான் தீவுக்கே உரிய நண்டினமாகும்.

இந்தத் தீவுகளில் கண்டுபிடிக்கப்பட்ட சிவப்பு நிறம் கலந்த ஊதா நிற 'இன்சுலமன்' நண்டு வகைகள் இந்த தீவுக்கும் அதனைச் சூழவுள்ள தீவுகளுக்குமே உரிய பிரத்தியேக வகை நண்டுகளாகும். கடற்பரப்புக் காரணமாக, இவற்றால் வேறு இடங்களுக்குச் செல்ல முடியாது. இதனால், வாழ்க்கையின் அனைத்து செயற்பாடுகளையும் இந்த உவர் நீரிலேயே அவை மேற்கொள்கின்றன. அவற்றின் உறவினர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தொடர்பின்றிப் பிரிந்துவாழ்ந்த இவை தற்போது புதிய உயிரினங்களை உருவாக்கியுள்ளன.

''முன்பு இனம் காணப்பட்டிருந்த ஒரே ஒரு இன்சுலமன் நண்டினம் பலவான் தீவுக்கு வடக்கே அமைந்துள்ள கெலமெயின் தீவுக் கூட்டங்களுக்கு மட்டுமே உரியது என்று எம்மால் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அதே போன்று, தற்போது இனங்காணப்பட்டுள்ள புதிய நண்டினங்கள் இந்தப் பலவான் தீவுக்கு மட்டுமே உரியன'' என்று ப்ரீடெக் மேலும் குறிப்பிடுகின்றார்.

ஆனால், இந்த சிறப்பான உயிர்ப்பல்வகைமை இன்று அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது. இந்தப்பகுதியில் அகழ்வுப்பணிகள் பல முன்னெடுக்கப்படுவதால், இங்குள்ள உயிர்ப்பல்வகைமைக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் குறித்து பொதுமக்களும் கடும் எதிர்ப்புணர்வினை வெளிப்படுத்தியுள்ளனர்.

''அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள உயிரினங்களுக்கும் தாவர இனங்களுக்கும் வாழ்வதற்கு இயற்கையான சிறு பகுதி மட்டுமே தற்போது எஞ்சியுள்ளது. இங்கு ஏற்படும் சிறு மாற்றங்கள் தஞ்சமடைந்திருக்கும் உயிரினங்களை அழித்துவிடும்'' என்று தெளிவுப்படுத்தும் ப்ரீடெக் மேலும் இவ்வாறு கூறுகின்றார்.

''இந்தத் தீவுகளில் உள்ள உயிர்ப்பல்வகைமை காரணமாகவே, இப்பிராந்தியத்தில் ஆய்வுகளில் ஈடுபடுவது அவசியமாக உள்ளது. இதனாலேயே, நாம் அடுத்தகட்ட நடவடிக்கையாக பலவானில் உவர்நீர் இறால் வகைகளைத் தெரிவு செய்திருக்கின்றோம்''

இவர்களின் இந்த ஆய்வு குறித்தான விபரங்கள் 'ரெவல்ஸ் புலட்டின் ஒஃப் சூலொஜி' எனும் உயிரியல் விஞ்ஞான ஆய்வு சஞ்சிகையின் புதிய வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பலவான் தீவில் கிடைத்த இந்த புதிய வகை நண்டுகள் அனைத்தும் உவர்நீரிலேயே வாழ்ந்து வருகின்றன.

(இ)


அண்மையில் கண்டுபிடிக் கப்பட்ட இன்சுலமன் ஜொஹான் கிறிஸ்டியானி (Insulamon Johann Christiani) எனும் நண்டினம் பலவான் தீவில் மட்டுமே காணப்படு கின்றது.


இன்சுலமன் மெக்ளம் எனும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட உவர்நீர் நண்டினம்.




# வீட்டைப் புதுப்பிக்க உதவிய நீளமான கூந்தல்



ந(ட்)டாஷா மோரேஸ் டி ஒன்ந்த்ரா 12 வயது சிறுமியாவார். இவரும் இவரது குடும்பத்தினரும் பிரேசிலில் ரியோ டி ஜெனைரோ நகர சேரிப்பகுதியில் வசித்து வருகின்றனர். இவரது தோழிகளும் அயலவர்களும் இவரை ந(ட்)டாஷா என்று பெயர் கொண்டு அழைக்காமல் 'ரபுன்சல்' என்றே அழைக்கின்றனர்.

மந்திரக்காரியினால் சிறைவைக்கப்பட்ட ஓர் இளவரசிதான் இந்த ரபுன்சல். 'டென்கல்ட்' என்ற பெயரில் ரபுன்சல் இளவரசியின் கதையினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வோல்ட் டிஸ்னியின் பிரபலமான கார்ட்டூன் திரைப்படத்தில் வரும் ரபுன்சல் இளவரசியைப் போன்றே ந(ட்)டாஷாவுக்கும் அசாதாரணமான நீளம் கொண்ட கூந்தல் உள்ளது. அதனாலேயே, அவரை அவ்வாறு அழைக்கின்றனர். அண்மையில் ந(ட்)டாஷா அவரது குடும்பத்தினருக்காக ஒரு தியாகத்தினை செய்துள்ளார்.

அவர் வசிக்கும் சின்னஞ்சிறிய வீட்டினைப் புதுப்பித்துக்கொள்வதற்காக, ஒன்றரை மீற்றர் நீளம் கொண்ட தனது அழகிய கூந்தலைக் கத்திரித்து விற்பனை செய்துள்ளார்.

இதுபற்றி அவர் குறிப்பிடுகையில்; ''கூந்தலைக் கத்தரிக்கும்போது, எனக்கு சற்று அச்சமாகத்தான் இருந்தது. கூந்தலுக்காக வழங்குவதாகக் கூறிய பணத்தொகையை வழங்காமல் ஏமாற்றிவிடுவார்களோ என்ற சந்தேகமும் வந்தது. நல்லவேளை, அப்படி எதுவும் நடைபெறவில்லை. நான் நன்றாகக் குட்டையாகும் அளவுக்கு கூந்தலைக் கத்தரித்துவிட்டேன்'' என்று ந(ட்)டாஷா கூறுகின்றார். அந்த அழகிய பொன்னிறக் கூந்தலுக்காக, ந(ட்)ஷாவுக்கு 5,000 அமெரிக்க டொலர்கள் கிடைத்தன.

வீட்டைப் புதுப்பித்துக் கொள்வதற்காக, இந்த பிரேசில் சிறுமி செய்த தியாகம் வெளிநாட்டு ஊடகங்களில் செய்தியாக வெளியாகி பிரபல்யத்தினை ஏற்படுத்தியிருந்தது. ந(ட்)டாஷாவின் கூந்தலைக் கத்தரித்து ஒழுங்குபடுத்த சுமார் நான்கு மணித்தியாலங்கள் வரை சென்றதாக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகின. ''உண்மையில் நீங்கள் இளவரசி ரபுன்சல் தானே'' என்று ஊடகவியலாளர்கள் ந(ட்)டாஷாவிடம் கேட்டபோது, தனக்கு ஸ்நோவைட்டைத்தான் பிடிக்கும் என்று ந(ட்)டாஷா கூறியிருக்கின்றார்.

நீண்ட கூந்தலை சீவுவதற்கு ந(ட்)டாஷாவுக்கு நாளாந்தம் $1\frac{1}{2}$ மணித்தியாலங்கள் தேவைப்பட்டுள்ளது. கூந்தலை சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் பேணுவதற்கு அவருக்கு வாரத்திற்கு ஒரு ஷாம்பூ போத்தல் தேவைப்பட்டுள்ளது. கூந்தலுக்காக அவருக்கு ஒவ்வொரு ஆண்டும் 600 அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளன. வறுமையான குடும்பத்தில் பிறந்த ந(ட்)டாஷாவுக்கு இந்த செலவு ஒரு பெரும் சுமையாகும். குடும்பத்தில் எவரதும் அழுத்தம் இன்றியே ந(ட்)டாஷாவின் கூந்தல் கத்தரிக்கப்பட்டதாக அவரின் தாய் கெத்தரினா கூறுகின்றார். எவ்வாறாயினும், கூந்தலைக் கத்தரித்துள்ளதனால் ந(ட்)டாஷாவுக்கு தற்போது சுதந்திரமான வாழ்க்கை கிடைத்துள்ளதாக அவர் மேலும் கூறுகின்றார்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

பெயர்: ...................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01) பின்வரும் பாடலை வாசிக்க

காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான் இந்தப்
பாரிடைத் துயில் வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்
ஊரினை நாட்ட இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறிவாளர் நெஞ்சில்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே

★ ***பாடலைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 6 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.***

1. 'உள்ளத்தில்' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..................................
2. 'விழிப்போர்' என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ..................................
3. 'நல்ல கதிரொளி நீதான்' என்னும் வாக்கியத்திலுள்ள பெயர் அடைமொழியை எழுதுக. ..................................
4. 'காரிருள்' என்பதைப் பிரித்தெழுதுக. ..................................
5. இப்பாடலிலுள்ள முன்னிலை ஒருமைச் சொல் ஒன்று தருக. ..................................
6. இங்குள்ள உயர்திணைப் பெயர்ச்சொல் ஒன்று தருக. ..................................

02) அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வெற்றிடத்தை நிரப்புக.

1. சிங்கத்தின் கர்ச்சினையைக் கேட்ட ஏனைய விலங்குகள் ஓடி .............................. ந்தன. (ஒளி, ஒழி, ஒலி)
2. மோகன் தாகந்தீரக் குளிர் ........................ குடித்தான். (பாணம், பானம், பாநம்)
3. மழை வெள்ளம் எங்கும் ........................... பாய்ந்தது. (பறந்து, பரத்து, பரந்து)

03) 1. பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.

✱ காற்றில் மரங்கள் அசைந்து ஆடின.

..................................................................

2. பின்வரும் வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.

✱ வானில் பறவை பறந்தது.

..................................................................

04) சரியான விடையைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. பூவில் இருந்து மணம் கமகம என்று வீசியது. கமகம என்பது .................................... (இணைமொழி, இரட்டைக்கிளவி, அடைமொழி)
2. ஏழை எளியவர்களுக்கு உதவுவது உத்தமகுணமாகும். இங்கு ஏழை எளியவர் என்பது .................................... (மரபுத்தொடர், இணைமொழி, உவமைத்தொடர்)
3. பாலைப்போல நிலவு வானில் பவனி வருகின்றது. பாலைப்போல என்பது .................................... (உவமைத்தொடர், மரபுத்தொடர், அடைமொழி)
4. நாய் விரைவாய் ஓடியது. விரைவாய் என்பது .................................... (செயப்படு பொருள் அடைமொழி, பயனிலை அடைமொழி, எழுவாய் அடைமொழி)

05) பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரினதும் கருத்தை எழுதுக.

1. வயிற்றெரிச்சல் - ....................................................
2. முகம் மலர்தல் - ....................................................

06) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. வீண் செலவு செய்பவன் -................................................
2. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை -................................................

07) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

1. ஆழம் அறியாமல் காலை விடாதே.

..................................................................

2. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லாக்கு.

..................................................................

08) தங்கம், கம்பம், காகம், கட்டம் என்ற சொற்களில் 'க' என்னும் எழுத்தில் காணப்படும் இயல்பொலிச் சொற்களை எழுதுக.

1. .............................................. 2. ..............................................

09) நூதனசாலை, சூரியன் என்ற இரு சொற்களிலும் 'நூ', 'சூ' என்னும் எழுத்துக்களில் இடப்பட்டுள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை அடைப்புக்களிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. ூ - (கீழ்காலும் சுழியும், மடக்கேறு, மடக்கேறும் அரவும்)

..................................................................

2. ூ - (மடக்கேறு, கீழ்க்கால், கீழ்க்காலும் சுழியும்)

..................................................................




10) தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடப் பெயர்களை இனங்கண்டு சொல்லுக்குரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

1. நாம் - (தன்மை ஒருமை, முன்னிலைப் பன்மை, தன்மைப் பன்மை)

..................................................................

2. அவன் - (தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை, படர்க்கை ஒருமை)

..................................................................

11) பின்வரும் ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

1. அதிபர் .................................... 2. வகுப்பாசிரியர் ....................................
3. பதினைந்து .................................... 4. விளாம்பழம் ....................................

12) ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

1.  .............................. 2.  ..............................

13) கருத்தைத் தமிழில் எழுதுக.

1. I am reading a book ..................................................
2. Please open your box ..................................................

14) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. அபி வ(த்)துற (B)பொமு ..................................
2. (G)குறுத்துமா எய்(Dh)த? ..................................

★ ***15 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.***

15) தென்னம் வண்டு தென்னையைத் தாக்காது பாதுகாக்க தென்னைக்கு அருகில் வளர்க்கப்படும் தாவரம் எது?

1. குருவிச்சை 2. கரும்பு 3. கொடிக்கள்ளி 4. பிரம்பு

16) கொத்தாகப் பூக்கும் பூ எது?

1. அலரி 2. செவ்வரத்தை 3. தொட்டாற்சிணுங்கி 4. ரோஜா

17) எல்லாக் காலத்திலும் பூக்கும் தாவரம் எது?

1. வேம்பு 2. இலுப்பை 3. தென்னை 4. முள்முருங்கை

18)  இவ்வுருவில் உள்ள பூ எது?

1. ஓக்கீட் 2. நீல அல்லி 3. அகத்தி 4. செவ்வரத்தை

19) கழிச்சல் நோயைப் பரப்பும் பிராணி எது?

1. நாய் 2. எலி 3. ஈ 4. நுளம்பு

20) வயல்களில் தீங்குவிளைவிக்கும் பூச்சிகளை அழிக்கும் பிராணி எது?

1. ஆந்தை 2. காகம் 3. வெளவால் 4. மீன்கொத்தி

21) சிறுவர்களுக்கு உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ துன்பம் விளைவிப்போர் பற்றி அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் எது?

1. 119 2. 1929 3. 1919 4. 1948

22) பாம்பு கடித்த ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாகச் செய்ய வேண்டிய மிகப் பொருத்தமான செயல் எது?

1. பாம்பைப் பிடித்து பாதுகாப்பாக வைத்திருத்தல்.
2. கடித்த இடத்திற்கு சிறிது மேலே ஒரு துணித் துண்டினால் கட்டிவிடுதல்.
3. கடித்த இடத்தில் உகந்த மருந்தைப் பூசுதல்.
4. பருகுவதற்கு உகந்த பானத்தைக் கொடுத்தல்.

23) இலங்கைக்கு கிழக்கே அமைந்துள்ள நாடு எது?

1. ஆபிரிக்கா 2. சீனா 3. இந்தியா 4. மலேசியா

24) உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவின் கூறு எது?

1. இலிப்பிட்டு 2. விற்றமின் 3. காபோவைதரேற்று 4. புரதம்

25) கடவுச்சீட்டு வழங்கும் திணைக்களம் எது?

1. ஆட்பதிவுத் திணைக்களம் 2. குடிவரவு-குடியகல்வுத் திணைக்களம்
3. சுங்கத் திணைக்களம் 4. பொலிஸ் திணைக்களம்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மில்லியன் கணக்கிலான எறும்புகள் வாழ்ந்த நகரமொன்றினை நிலத்திற்கடியில் இருந்து கண்டுபிடிப்பதில் விஞ்ஞானிகள் குழுவொன்று வெற்றியடைந்துள்ளது. கைவிடப்பட்ட இந்த எறும்பு நகர் பிரேசிலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுரங்கப் பாதைகள், குடியிருப்புத்தொகுதிகள், கிளைப் பாதைகள், பூங்கா என்பவற்றால் நிறைந்துள்ள இந்த அதிசய நகர், உலகில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள மிகப் பெரிய எறும்புக் குடியிருப்புத் தொகுதியாகும் எனக் கூறப்படுகின்றது. இலைகளை உண்ணும் இந்த எறும்புக் கூட்டம் இதனைக் கைவிட்டமைக்கான காரணம் என்னவென்று இதுவரை அறிய முடியாதிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்*


இலை உண்ணி எறும்புகளின் இந்தக் (குடியேற்றத்) தொகுதி மனிதன் வாழும் நகரங்களுக்கு அடுத்ததாக உலகில் திகழும் மிகப்பெரிய குடியேறறத் தொகுதியாகும்.

கூட்டுத்தொகுதிச் செயற்பாடு: குறிப்பாக ஒன்றோடொன்று தொடர்புடைய புற்றுகளுக் கும் சுரங்கத் தொகுதிகளுக்கும் கொங்ரீட் நிறைத்து ஆய்வு செய்யும் விதம்.

குழாய் மற்றும் சுரங்கத்திற்குள் கொங்கிறீட் நிரப்பிய பின், சூழவுள்ள மண்ணை அகற்றியதை அடுத்தே, அங்குள்ள குடியிருப்புத் தொகுதியைக் காணக்கூடியதாக இருந்தது.

# நிலத்திற்கடியில் பெரியதோர் எறும்பு நகர்

## எறும்பு நகர்

இந்த எறும்பு நகரைக் கண்டுபிடித்ததும் விஞ்ஞானிகள் செய்த முதல் வேலை அங்கிருந்த புற்று, சுரங்கம் என்பனவற்றுடன், இணைத்து அமைக்கப்பட்டிருந்த காற்றை வழங்கும் துளைகளினூடாக, கொன்கிறீட் கலவையை அனுப்பியமையாகும். எனினும், இந்த செயற்பாட்டுக்காக சுமார் 10 நாட்கள் எடுத்தமையானது, விஞ்ஞானிகளை வியப்படையச் செய்தது.

பூமியிலிருந்து 26 அடிகள் உள்ளே அமைக்கப்பட்டிருந்த இந்தச் சுரங்கம் மற்றும் குடியிருப்புக்களைக்கொண்ட தொகுதி, 500 சதுர அடி வரை பரவியிருந்தது. இதனைக் கண்டறிந்த பின்னரே, சுற்றியுள்ள மண்ணை அகற்றி, விஞ்ஞானிகள் அப்பிரதேசத்தில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர்.

எறும்புகளின் இந்த நிர்மாணத்தை, மனிதரால் அமைக்கப்பட்ட சீனப் பெருஞ் சுவருடன் ஒப்பிட முடியுமென சுமார் ஒரு மாத காலம் அங்கு ஆராய்ச்சியில் ஈடுபட்ட பேராசிரியர் லுயிஸ் போஜி கூறியுள்ளார். இந்த எறும்புக் கூட்டத்தை ஆய்வாளர்கள் 'அற்புத உயிரினங்கள்' என அறிமுகம் செய்கின்றனர். எறும்புகள் ஒன்றிணைந்து இந்தப் பாரிய செயலை செய்தமையானது, வியப்புக்குரிய செயலாகும் என்பதே அவர்களது கருத்தாகும்.

இந்தப் பாரிய செயலைச் செய்யும் பொருட்டு ஓர் எறும்பானது, தன்னுடைய நிறையைவிட எடை கூடிய மண்ணைப் பலமுறை சுமந்து சென்றிருக்கும். அவ்வாறு தூக்கிச் சென்ற தூரம் எமது கணிப்பின்படி, அரை மைலையும் விட அதிகமானதாகும். இந்த நகரங்களில் வாழ்ந்தது பிரேசிலில் வாழ்ந்த இலைகளை உண்ணும் எறும்புகளாகும்.


எறும்புகளின் குடியேற்றத்தின் வெளிப்புறத் தோற்றம்.


**நிலத்திற்கு அடியில் நகரம்: இங்கு ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடும் மனிதர்களின் உயர அளவை வைத்து பிரேசில் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இலை உண்ணி எறும்புகளின் ராட்சதக் குடியேற்றப்பகுதியின் விசாலத்தன்மையை ஊகிக்க முடியும்.**

## ராணி

எறும்பு ராணி தனது குடியேற்றத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆண் எறும்புகளிடமிருந்து 300 மில்லியன் விந்தணுக்களைச் சேர்த்துக்கொள்கின்றன. அதன்பின்னரே, அது முட்டையிடத் தொடங்கும். ராணி இடும் முட்டைகளைப் பொறுத்து, ஒவ்வொரு விதமான தொழிலைச் செய்யும் பொருட்டு இலையுண்ணி எறும்புகளில் வேலையாட்கள் உருவாகும். நிர்மாணப்பணிகள், பொருட்கள் சேகரித்தல் போன்ற பணிகளைச் செய்வதற்கு வேறு எறும்புகள் உருவாகும். ஏனைய எறும்புகளின் பணிகளாக அமைவது: குப்பைகளையும் கழிவுகளையும் அகற்றுதல், கேடு விளைவிக்கக்கூடிய சக எறும்புகளின் தலையில் ஒட்டுண்ணிகளை அகற்றுதல் என்பனவாகும். அத்துடன், தமது சுய பாதுகாப்புக்காக, இலையுண்ணி எறும்புகளில் பெரிய எறும்புகளைக்கொண்டு படை அணிகள் அமைக்கப்படுகின்றன. இவை பகைவர்களை அறிந்து கொள்ளக்கூடிய (அடையாளங் காணக்கூடிய) திறமையினைக் கொண்டுள்ள அதேவேளை, பாரம் சுமக்கவும் வல்லமையாகும். அந்தவகையில், தமது நிறையைவிட ஐம்பது மடங்கு நிறையை இவை சுமக்கக்கூடியவை.

**எறும்புகள் சிலவகை காளான்களை வளர்ப்பதற்காகவே தாவர இலைத்துண்டுகளைப் பயன்படுத்துகின்றன. அவற்றின் கூட்டுப்புழுக்கள் வளர்வதற்குத் தேவையான பிரதான உணவாக காளான்கள் உள்ளன.**



## நல்ல திட்டமிடல்

வளைந்து- நெளிந்து செல்லும் இக்கூட்டு நகரை வெளிக்கொணர 40 தொன் மண்ணை நீக்க வேண்டியதொரு நிலை ஆய்வுக் குழுவிற்கு ஏற்பட்டது. அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி டூபர்ட்டி ஹெொல்டொப்லர் என்பவரே, இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

எறும்புகளின் இந்த நிலக்கீழ் நகரமானது, நன்கு திட்டமிடப்பட்ட கட்டமைப்பாகவும் காற்றோட்டத்துடன் கூடியதாகவும் பல்வேறு விநியோக உபாயங்கள் நிறைந்தும் காணப்படுகின்றது. அத்தோடு, பொருட்களை இலகுவாக அங்கும் இங்கும் கொண்டுசெல்லக்கூடிய சுரங்க வழிகளும் நிறைந்து காணப்படுகின்றன. இந்த எறும்புக் கூட்டத்திற்குட்பட்ட ராட்சத எறும்புகள், அவற்றின் எதிரிகளைத் தாக்க விசேட ராணுவ அமைப்பையும் உருவாக்கியுள்ளன. நாமும் சில சந்தர்ப்பங்களில் அந்தப் படைவீரர்களின் உதவியை சுரங்கம் தோண்டும் பணிபோன்ற பொறியியல் நடவடிக்கைகளின் போது, பயன்படுத்திக்கொண்டோம்'' என கலாநிதி ஹொல்டொப்லர் மேலும் குறிப்பிட்டார்.

**இரஞ்சித் ஜெயகர்**

## உலகிலேயே பளு தூக்கும் வீரர்கள்



# 1,141

*சாணி உருட்டி வண்டு தனது உடல் நிறையைப் போல 1,141 மடங்கு நிறையை இழுத்துச் செல்லும் ஆற்றலுடையது. பரிமாணத்தின் அடிப்படையில், மனிதன் ஒருவன் இரட்டைத்தட்டுப் பேரூந்துகள் ஆறினை இழுத்துச் செல்வதற்கு இது சமனாகும்.*



### இவர்களும் போட்டிக் களத்தில்...

* இலை உண்ணி எறும்புகளுக்குத் தமது உடலின் நிறையைப் போல 50 மடங்கு நிறையைத் தூக்கிச் செல்ல முடியும்.
* கொரில்லாக் குரங்கிற்கு 4,600 இறாத்தல் அதாவது, தனது நிறையைவிட, 10 மடங்கு நிறையைச் சுமந்து செல்ல முடியும்.
* ஆபிரிக்கக் கொண்டைக் கழுகுக்கு 36 இறாத்தல், அதாவது, தனது நிறையைவிட நான்கு மடங்கு நிறையைத் தூக்கிக்கொண்டு பறக்க முடியும்.
* மனிதனுக்கு, (உலகின் அதிசக்திவாய்ந்த மனிதனுக்கு) 898 இறாத்தல் அதாவது, தனது நிறையைவிட 2.3 மடங்கு நிறையைத் தூக்க முடியும்.
* ஒரு யானைக்கு 20,000 இறாத்தல், அதாவது, தனது நிறையைவிட 1.7 மடங்கு நிறையை சுமந்துகொண்டு செல்ல முடியும்.
* மாட்டுக்கு 2,000 இறாத்தல் சுமையை, அதாவது,தனது நிறையைவிட, 1.5 மடங்கு நிறையை இழுத்துச் செல்ல முடியும்.
* கரடி ஒன்றிற்கு 1,200 இறாத்தல், அதாவது, தனது [illegible] மடங்கு நிறையைத் தூக்க முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரின் முக்கியத்துவம் பற்றி நாம் எல்லோரும் நன்கறிவோம். நீர்வளத்தைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரினதும் தலையாயக் கடமையாகும். சுத்தமான நீர் பெரும் சொத்தாகும். எனவே, அதனைப் பாதுகாப்பது எமது கடமை என்றே கூற வேண்டும்




காலை அல்லது மாலை வேளையில் பயிர்களுக்கு நீர் ஊற்றவும்.


தண்ணீர்க் குழாயில் shut-off பயன்படுத்துங்கள்.


பயிர்களை, செடிகளைச் சூழ ஈரப்பதனைப் பாதுகாக்கும் வழிமுறைகளைப் பயன்படுத்துங்கள்.




ஷவரில் நீர் வெளியேற்றத்தினைக் கட்டுப்படுத்துங்கள்.

விலை

# எங்கும்... எப்பொழுதும்... நீரை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்

* உடைகளைக் கழுவும்போதும் குளிக்கும் காய்கறிகள், பீங்கான்-கோப்பைகள், சட்டி-பா திறந்துவிடாதீர்கள். அப்பொழுது சிறிய பாத் நிரப்பி வைத்துக்கொள்ளுங்கள். இதன்மூலம்
* குடிப்பதற்கான நீரைக் குவளையில், கு விரயமாகாது.

# ஒரு துளி நீரும் பெறு

## நீர் எமக்கு அவசியமானது ஏன்?

* உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு.
* உணவு தயாரிப்பதற்கு.
* சுகாதார நடைமுறைகளுக்காக (குறிப்பாக, உடைகளைக் கழுவுவதற்கு, குளிப்பதற்கு).
* விவசாய நடவடிக்கைகளின் போது.
* மீன்பிடித் தொழிற்துறைக்கு.
* பலதரப்பட்ட தொழிற்சாலை உற்பத்திகளை மேற்கொள்வதற்கு.
* ஹோட்டல், துறைமுகம், வைத்தியசாலை மற்றும் இதர சேவைகளை வழங்குவதற்கு.
* நீர்மின் உற்பத்திக்கு.
* போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு.

## இலங்கையின் நீர்வளம்

மத்திய மலைநாட்டிலிருந்து உற்பத்தியாகும் ஆறுகளூடாக இலங்கையின் நீர்வளம் போஷிக்கப்படுகின்றது. இலங்கையின் மொத்த நீர்வளத்தில் 1/6 பங்கு மகாவலி கங்கையின் பங்களிப்பாகும். ஆறுகள், வாவிகள், குளங்கள், கிணறுகள், குழாய் நீர் என பல்வேறு வழிகளில் இலங்கை மக்களின் நீர்த் தேவை பூர்த்திசெய்யப்படுகின்றது. உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், சுத்தமான நீரை அருந்தும் வாய்ப்பு இலங்கை மக்களுக்கு பெரிதும் கிடைக்கின்றது.

ஆனால், இந்த வாய்ப்பு எத்தனை நாட்களுக்குத் தொடரும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. ஏனெனில், இலங்கையில் தனி நபருக்கு ஒரு நாளைக்குத் தேவைப்படும் நீரின் அளவில் நாளாந்தம் 13 கன மீற்றர் அளவு குறைவடைவதாகவும் கூறப்படுகின்றது. ஓராண்டில் மகாவலி ஆற்றின் ஆழத்தில் 165,000 தொன் மண் சேர்வதாகவும் கூறப்படுகின்றது. ஆக, மேற்படி காரணங்களினால் சுத்தமான நீருக்குத் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது. இந்த அச்சுறுத்தலுக்கு மண்ணரிப்பே பிரதான காரணமாகும். வனாந்தரங்கள் அழிக்கப்படுவது மண்ணரிப்புக்கு ஏதுவான முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது. அந்தவகையில், இலங்கையில் மட்டும் ஓராண்டில் 30,000 ஹெக்டெயர் காடுகள் அழிக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆக, ஆற்றை வளப்படுத்தும் பிரதேசங்கள் இவ்வாறு அழிக்கப்படுவது நாட்டின் நீர்வளம் பாதிக்கப்படுவதற்கான பிரதான காரணமாகும்.

### எமது நீர்ப் பயன்பாடு எவ்வளவு?

உலகின் மொத்த நீர்ப் பயன்பாட்டில் பயிர்ச்செய்கைக்காக 80%, தொழிற்சாலைப் பயன்பாட்டிற்கு 12%, அருந்துவதற்கு 8% என்ற அளவில் நீர் பயன்படுத்தப்படுகின்றது.



## நீர் மாசடைதல்

பல தசாப்தங்களுக்கு முன்பிருந்தே, நாட்டின் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்த நீர்நிலைகளில் ஏராளமானவை தற்போது மாசடைந்துவிட்டன. 'பேர வாவி' இதில் பிரதானமானதாகும். மனிதர்களும் விலங்குகளும் பயன்படுத்த முடியாதளவுக்கு இத்தகைய நீர்நிலைகளின் தன்மை தற்போது மாறுபட்டுள்ளமையானது, நீர் மாசடைதலுக்கு சிறந்த உதாரணமாகும்.

குப்பை கூழங்கள், மலக்கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள், விவசாய ரசாயனப் பொருட்கள், பெற்றோலிய எண்ணெய்க் கழிவுகள் போன்றவை நீரில் சேர்வதானது, நீர் மாசடைவுக்குப் பிரதான காரணிகளாகத் திகழ்கின்றன. அத்துடன், நவீன தொழில்நுட்ப மயமும் நகரமயமாதலும் நீர் மாசடைவினை மேலும் துரிதப்படுத்துகின்றன. மாசடைந்த நீர்ப் பயன்பாட்டின் காரணமாக, வயிற்றோட்டம், மஞ்சள் காமாலை போன்ற தொற்று நோய்களும் ஏற்படுகின்றன.



## நீரை மாசுபடுத்தாதீர்கள்!

உலகில், பாவனைக்கான நீர்வளம் மிகவும் குறைவாகவே உள்ளது. 2015 இலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியாகும்போது, உலகின் நீர்வளம் (நைல் நதி, அமேசன் நதி, மஞ்சள் நதி ஆகியவை) 50 சதவீதத்தினால் குறைவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது எத்தியோப்பியா, சோமாலியா, ஆகிய ஆபிரிக்க நாடுகளில் கடும் வறட்சியும் நீர்ப் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. அருந்துவ[illegible]கு ஒரு சொட்டு நீர் இன்றி நாளாந்[illegible] 4,500 பேர் மரணிக்கின்றனர். இதன்படி, நோக்கினால், வருடாந்தம் அருந்துவதற்குப் போதியளவு நீர் இன்றி மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இறக்கின்றனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

நீர்வளங்களை அழித்தல், நீரில் கழிவுகளைச் சேர்த்தல் போன்ற செயற்பாடுகள் தொடருமாயின் தாகத்துக்கு அருந்தக்கூட ஒரு துளி நீரைப் பெற்றுக்கொள்வதும் சிரமமானதாகவே இருக்கும் என எதிர்வு கூறப்படுகின்றது. எனவே, நீரில் கழிவுகள், விவசாய ரசாயனக் கழிவுகள் என்பனவற்றை கலப்பதனைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். அவ்வாறு நீரை மாசுபடுத்தும் சம்பவங்கள் நிகழும்போது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் உரிய நிறுவனங்களுக்கு அதுபற்றி அறிவிக்கவும் தயங்காதீர்கள். இது எமது கடமையாகும்.

## நீர் சுத்திகரிப்புக்கான செலவு

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 40 சதவீதமானவர்களுக்கு மட்டுமே குழாய் நீர் கிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




…வினைத்திறன் மிக்க சலவை இயந்திரத்தினைப் பயன்படுத்துங்கள்.

சவர்க்காரம் இடும்போது நீர்க் குழாயினை மூடிவிடுங்கள்.

பல் துலக்கும்போது நீர்க்குழாயை மூடிவிடுங்கள்.

எப்பொழுதும் சிறிய பாத்திரத்தில் நீரை நிரப்பிப் பயன்படுத்துங்கள்.

மலசலகூட சிஸ்டனில் நீர் நிரப்பிய போத்தல் ஒன்றினை வைப்பது உகந்தது.

வீட்டுத் தரையைக் கழுவும்போது ஹோஸ் பைப்பினைப் பயன்படுத்தி நீரைப் பாய்ச்சி கழிவினை அகற்ற முற்படுவதற்குப் பதிலாக, தும்புத்தடி ஒன்றினைப் பயன்படுத்தித் தேய்க்க முயலுங்கள்.

…கும்போதும் முகம் கழுவும்போதும் மற்றும் …-பானைகள் கழுவும்போதும் குழாய்நீரைத் …ாத்திரத்தில் அல்லது வாளியில் நீரை …ம் நீர் விரயமாவதனைத் தடுக்க முடியும். … குடத்தில் நிரப்பிக்கொண்டால் நீர்

✱ வாகனங்களைக் கழுவும் தடவைகளைக் குறைத்துக்கொள்ளுங்கள். அதன்போது, ஹோஸ் பைப்பினைப் பயன்படுத்தாமல் வாளியினைப் பயன்படுத்துங்கள்.

✱ ஹோஸ் பைப்பினால் பூஞ்செடிகளுக்கு நீர் பாய்ச்சாதீர்கள். அதற்கு பூவாளியினைப் பயன்படுத்துங்கள். மலசலகூடத்தின் சிஸ்டனுள் ஒரு லீற்றர் நீர்ப்போத்தலை மூழ்க்கி விட்டு விடுங்கள். இதனால், சிஸ்டன் செயற்படும் ஒவ்வொரு வேளையும் ஒரு லீற்றர் சேமித்துக் கொள்ள முடியும்.

✱ வீட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்திய நீரினை செடிகளுக்கும் மரங்களுக்கும் ஊற்ற முடியும். வீட்டின் திறந்தவெளிப்பகுதியில் அல்லது கூரைப்பகுதியில் நீரைச் சேமிக்கக்கூடிய தாங்கிகளை வைத்தல் நன்று. அல்லது மழைநீர் சேமிப்புத் தாங்கியினை வைத்துக்கொள்ளுங்கள். மழைநீர் பயிர்ச்செய்கைக்கு பெருமளவில் உதவும்.

# …மதி மிக்க சொத்தாகும்

குறிப்பாக, நகர்ப்புறங்களில் சுத்திகரிப்பு நிலையங்களில் சுத்திகரிக்கப்பட்ட நீரே குழாயினூடாக, விநியோகிக்கப்படுகின்றது. அம்பத்தல நீர் சுத்திகரிப்பு நிலையம் இதற்கு ஓர் உதாரணமாகும். இவ்வாறான சுத்திகரிப்பு நிலையத்தில் ஒரு கன மீற்றர் (1 அலகு) நீரை சுத்திகரிக்க 40 ரூபாய் செலவாகின்றது. ஆனால், நீரை சுத்திகரிப்பதற்கு செலவாகும் தொகையை விட 30 …வீதத்திற்கும் குறைவான தொ…ய பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்றது.

நிலமை இவ்வாறிருக்க, எமது கவனயீனம் காரணமாக, நீர் பெருமளவில் விரயமாகின்றது. குழாய் நீர் கிணற்று நீர், வாவி நீர், ஆற்றுநீர் எனப் பல்வேறு வழிகளிலிருந்து பெறப்படும் நீரினை விரயமாக்குவது தேசிய குற்றமாகும். இதனால், நீரை விரயமாக்காமல் பயன்படுத்த நாம் பழகிக்கொள்வோம்.



## எமது உடலுக்கு நீரின் அவசியம்

ஆரோக்கியமானவராக நீங்கள் வாழ விரும்பினால் நாளாந்தம் 5 லீற்றர் நீரை அருந்துவது அவசியமாகும். உடலின் செயற்பாட்டிற்கு நீர் அவசியமாகும். தேநீர், கோப்பி, செயற்கைப் பானங்கள் போன்ற பானங்களை அருந்தினாலும் கூட, இவற்றைவிட உடலுக்கு நீரின் பயன்பாடே மிகவும் தேவையானது. ஆகாரமின்றி ஒரு மாதம் வரை ஒருவரால் உயிர்வாழ முடியும். ஆனால், நீர் இல்லாமல் ஒரு வாரம் வரையேனும் உயிர் வாழ முடியாது. உடலின் குருதிச் சுற்றோட்ட செயற்பாட்டிற்கும் உணவு சமிபாட்டுத் தொகுதியின் செயற்பாட்டிற்கும் நீர் மிக முக்கியமான பங்களிப்பினைச் செய்கின்றது. அத்துடன், அழகிய சருமத்தைப் பெறுவதற்கும் குருதிச் சுற்றோட்ட செயற்பாட்டிற்கும் நீர் அவசியம் தேவைப்படுகின்றது.

## உலக வெப்பமடைதலும் நீரும்


வளிமண்டலத்தில் வெப்பநிலை அதிகரிப்பானது, சூழலின் வெப்பநிலை அதிகரிப்புக்கும் வறட்சி நிலை ஏற்படவும் நிலத்தடி நீரில் விஞ்ஞான ரீதியில் மாற்றம் ஏற்படவும் காரணமாக உள்ளது. இந்த நிலைமையானது, நீரின் தரத்தினை மாற்றும் தன்மை கொண்டது. அத்துடன், உலக வெப்பமயமாதல் காரணமாக, பனிமலைகள் உருகுவதனால், கடல் நீர் மட்டம் உயர்வடைகின்றது. இதனால், சுத்தமான நீர் மட்டம் குறைவடைகின்றது.

## நீரியல் வட்டத்திற்கு இடையூறு விளைவிக்காதீர்!

நீர்வளம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், நீரியல் வட்டம் சிறப்பாக செயற்பட வேண்டும். இதற்கு ஏற்படும் இடையூறுகள் நீர்வள மூலாதாரங்களையும் பாதிக்கும். ஆறு, குளம், வாவி, நீர்த்தேக்கங்கள், சமுத்திரம் போன்ற நீர்நிலைகளில் உள்ள நீரானது, சூரிய வெப்பத்தினால் ஆவியாகின்றது. அவ்வாறே, தாவரங்களில் இருந்தும் நீர் ஆவியாகி வளிமண்டலத்தில் சேர்கின்றது.

இந்த நீராவி மேல் நோக்கிப் பயணிப்பதன்மூலம் மேகங்கள் உருவாகின்றன. இந்த மேகங்கள் ஒடுங்கி சிறிய நீர்த்துளிகளாகி பூமியை நோக்கி மழையாகப் பொழிகின்றன. மனிதரினதும் தாவரங்களினதும் பயிர்ச்செய்கை நிலங்களினதும் தேவைகளை மழைநீரின் ஒருபகுதி நிறைவேற்ற, மழை நீரின் மற்றைய பகுதி ஆறு, குளம், வாவிகளினூடாகப் பாய்ந்து சென்று சமுத்திரத்தில் கலந்து மீண்டும் ஆவியாகி மேலெழுகின்றது. இதுவே நீரின் சுழற்சி வட்டமாகும். எனினும், காடுகள் அழிப்பு மற்றும் நகரமயமாக்கல் என்பன இந்த நீரியல் வட்டத்தினை நேரடியாகவே பாதிக்கின்றன எனலாம். எனவே, அத்தகைய செயற்பாடுகளைத் தவிர்த்து நடக்க வேண்டும்.

(இ)



ஆறு, வாவி, ஏரி, கடல்

ஆறுகளில் மணல் அள்ளப்படுவதனால் கடல் மட்டத்தினைவிட, ஆறுகளின் நீர்மட்டம் குறைவடைகின்றது. இதனால், கடும் வெப்பநிலை நிலவும். வறண்ட காலத்தில் உவர்நீர் ஆற்றின் மேற்பகுதியில் பயணிக்கும். அண்மையில் களனி கங்கை நீர் சுத்திகரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டபோது, நீர் உப்புச் சுவையுடன் இருந்தமைக்கு இதுவே காரணமாகும்.

இன்றைய உலக சனத்தொகையில் 2.6 பில்லியனுக்கும் அதிகமானவர்கள் சரியான மலசலகூட வசதிகளின்றி அவதிப்படுகின்றனர். 2010 இல் உலகில் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1.7 மில்லியன்களாகும். இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுபிள்ளைகளாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகளும் விடைகளும்

1. அடி மலர்ந்த நுனி மலராத பூ என்ன பூ?
2. குதிரை ஓட, ஓட வால் குறைகின்றது. அது என்ன?
3. இலையுண்டு கிளையில்லை. பூ உண்டு காயில்லை. அது என்ன?
4. ஒற்றை மனிதனுக்கு ஒன்பது கை. அது என்ன?
5. எட்டாக்கொம்பில் மிட்டாய்ப் பொட்டலாம். அது என்ன?
6. வீட்டுக்கு வந்த விருந்தாளி வாசலில் நிற்கிறார். வரவேற்க ஆளில்லை. அவன் யார்?
7. போருக்குப் போகாத வீரன் போர்க்களத்தையே விரட்டி விடுவான். அவன் யார்?

### விடைகள்

1. வாழைப்பூ
2. ஊசி
3. கரும்பு
4. மரம்
5. தேன்கூடு
6. செருப்பு
7. பாம்பு

எஸ்.டி.எம்.ஹுஸ்னி,
குருந்துகஹஎல மு.வித்.,

# தாகத்திற்கு ஏன் குளிர்ந்த நீரை அருந்துகின்றோம்?



மூளையின் அடிப்பகுதியில் நரம்பு உயிரணுக்களாலான 'வேட்கை மையம்' எனும் ஒரு தொகுதி உள்ளது. குருதியில் உள்ள நீரின் அளவு குறைந்து போகும்போது, அந்த வேட்கை மையத்தால் அது உணரப்பட்டு எமக்குத் தாகம் ஏற்படுகின்றது.

தொண்டையின் உட்பகுதி மென்தோல் வறண்டு போகும்போதும் வேட்கை மையத்தில் நீரின் வறட்சி உணரப்பெற்று அங்குள்ள நரம்புகளால் அவ்வறட்சி மூளைக்கும் உணர்த்தப்படுகின்றது.

வறட்சியால் கிளர்ச்சியுற்ற மேற்கூறிய நரம்புகள் குளிர்ந்த நீரை அல்லது பானங்களைப் பருகும்போது, தடிமனாகி வறட்சி தணிந்து விடுகிறது. இவ் வறட்சித் தணிப்பு சூடான பானங்களை அருந்தும்போது, நடைபெறுவதைவிட குளிர்ந்த பானங்களை உட்கொள்ளும்போது விரைந்தும், மிகுதியாகவும் நடைபெறுகின்றது.

எச்.எம்.அஸ்லம்,
மட்/ஓட்டமாவடி
தேசிய பாட., ஓட்டமாவடி.

# உலகில் முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்ற ஆண்டுகள்




- மே தினம் ஆரம்பிக்கப்பட்டது - 1886
- நொபெல் பரிசுத் திட்டம் ஆரம்பம் - 1901
- சாரணர் இயக்கம் ஆரம்பம் - 1907
- உலக மகா யுத்தம் ஆரம்பம் - 1914
- உலக மகா யுத்தம் முடிவு - 1918
- 2 ஆம் உலக மகா யுத்தம் ஆரம்பம் - 1939
- 2 ஆம் உலக மகா யுத்தம் முடிவு - 1945
- அரபு நாடுகளின் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது - 1945
- ஐ. நா.வின் தலைமையகம் ஆரம்பிக்கப்பட்டது - 1945
- யுனெஸ்கோ நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது - 1946
- அணிசேரா நாடுகளின் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது - 1961
- ஆபிரிக்க ஒற்றுமை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது - 1963
- தென் கிழக்காசிய நாடுகளின் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது - 1967
- சார்க் அமைக்கப்பட்டது - 1985
- சர்வதேச சமாதான ஆண்டு - 1986
- பிரித்தானியர் இலங்கையை முழுமையாக கைப்பற்றியது - 1815
- போர்த்துக்கேயர் இலங்கை வந்தது - 1505

எம்.எப்.எம்.அஸ்பாக், க/அஸ்கர் மத்.கல்.,

# ஏழைகளின் அப்பிள்- வாழைப்பழம்

மா, பலா, வாழை என்பன முக்கனிகள் என்று



போற்றப்படுகின்றன. இதில் எளிதில் எல்லோருக்கும் கிடைப்பது வாழை. வாழைக்குப் பல சிறப்பம்சங்களும் உண்டு. ஆசியாவின் பல பகுதிகளில் இது சிறப்பாக வளருகின்றது. எந்தக் காலத்திலும் கிடைக்கக்கூடியதுடன் சகலராலும் வாங்கக்கூடிய விலையிலும் இவை கிடைக்கின்றன. மிகவும் மலிவாக இவை கிடைப்பதால் இதை 'ஏழைகளின் ஆப்பிள்' என வர்ணிக்கின்றனர். உணவு உண்டபின் வாழைப்பழம் சாப்பிட வேண்டும். ஏனெனில், வாழைப்பழம் உணவை ஜீரணிக்கச் செய்யும். இதில் உயிர்ச்சத்துக்களும் தாதுப் பொருட்களும் அடங்கியுள்ளன. முதலில் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே வாழை பயிரிடப்பட்டது. பின்னர் பரவலாக உலகம் முழுவதும் பரவியது.

வாழைப்பழத்தில் பல வகைகள் உள்ளன. செவ்வாழை, ரஸ்தானி, கற்பூரவல்லி, மழைவாழை, பேயன் பழம், மொந்தன் பழம், பச்சை வாழை, நேத்திர வாழை, பூவன் பழம், கப்பல் வாழை, கதலி வாழை என பல வகைகள் உண்டு.

எம்.எம்.எப்.ஹனிஷ்மா,
அல்-ஃபஹ்ரியா தே.கல்.,
தொட்டவத்த, பாணந்துறை.



# ஜனநாயக ஆட்சி முறை

- ஜனநாயக ஆட்சி என்றால் என்ன?
  மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற ஆட்சி முறை ஜனநாயக ஆட்சி முறை எனப்படுகின்றது
- ஜனநாயகத்தின் தாயகம் எது?
  கிரேக்கம்
- ஜனநாயகம் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்த அறிஞர்கள் யாவர்?



ஆபிரஹாம் லிங்கன், ரூசோ

- ஜனநாயகத்தின் 3 வகைகள் எவை?
  நேரடி ஜனநாயகம்
  மறைமுக ஜனநாயகம்
  யாப்பு மயப்படுத்தப்பட்ட ஜனநாயகம்

ஃபாத்திமா ஃபஸுஹா,
அக்குறனை மு.பா.ம.வித்.,
அக்குறனை.

# முட்டாள் மனிதன்

ஒரு ஊரில் சிவசுந்தரம் என்ற ஒரு பணக்காரர் இருந்தார். அவர் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஏழை ஒருவன் குடிசையில் வாழ்ந்து வந்தான். அவன் மகா முட்டாள்.



ஒருநாள் சிவசுந்தரத்தின் மகன் ராஜா பாடசாலைச் செல்லப் புறப்பட்டு விட்டு "அப்பா நான் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். அதற்குப் பணம் தாருங்கள்" என்று கேட்டான். அதற்கு அவனுடைய அப்பா "உனக்கு எப்போது பார்த்தாலும் பாடசாலை செல்லும்போது பணம் கொடுக்க வேண்டும். பணம் வாங்கிச் செல்வதுதான் உன் வேலையாகிவிட்டது. உனக்கெல்லாம் பணம் தர ஒரு பண மரம்தான் நாட்ட வேண்டும்" என்று சத்தமிட்டார்.

இதை அந்தப் பக்கத்து வீட்டில் உள்ள ஏழை கேட்டுக் கொண்டிருந்தான்.

'ஆகா! பணம் சம்பாதிக்க நல்ல வழி ஒன்று கிடைத்துவிட்டது. இனி நான் பணக்காரராகிவிடலாம்' என்று எண்ணி அன்று முழுவதும் பாடாகப் பட்டு ஒரு 100 ரூபாய் பணம் தேடி அதை யாருக்கும் தெரியாமல் குழி ஒன்று தோண்டி அதில் வைத்துப் புதைத்துவிட்டான். அதன்பின்னர் தினமும் அதற்கு நீர் பாய்ச்சி வந்தான். இவ்வாறே ஒரு மாதகாலம் ஓடிச்சென்றது. ஒருநாள் அந்தப் பிச்சைக்காரன் யோசித்தான். 'நான் பணத்தைப் புதைத்து எவ்வளவு நாளாயிற்று! இன்னுமே பணம் மரம் முளைக்கவில்லையே. நான் புதைத்ததில் ஏதேனும் பிழை நடந்து விட்டதோ?' என்று எண்ணி அந்தக் குழியை மீண்டும் தோண்டிப் பார்த்தான். அப்போது அந்தப் பணம் உக்கலடைந்து சிதைந்து காணப்பட்டது. அவனுக்கு பெரிய ஏமாற்றம். அந்த ஏமாற்றத்துடன் சிவசுந்தரத்தின் வீட்டுக்குச் சென்று நடந்தவற்றை எல்லாம் கூறினான். சிவசுந்தரம் 'கல கல' வென்று சிரித்தபடியே, அப்படி அவர் அன்று தன் மகனுக்குக் கூறியதற்கான விளக்கத்தைக் கூறினார். அதன் பின்னர் தான் அவன் தனது முட்டாள் தனத்தை உணர்ந்துகொண்டு உழைக்கலானான்.

எம்.ஏ.எஃப்.நுஹா அன்சார்,
அல்-ஹுதா மு.ம.வித்., ரிதீகம.

# மீன்கள்



நீரில் வாழும் மீனினமே- நீங்கள்
நீந்தக் கற்றது எப்படியோ;
பாரில் உள்ள வடிவழகை- என்றும்
பார்த்து ரசிப்பார் யாருமில்லை

ஓரா கெண்டை கயலென்றும்- நல்ல
ஓட்டி திரளி காரலென்றும்
பேரர் வைத்தார் உங்களுக்கு-
மெல்லப்
பேசுவீரோ உம் வாய்திறந்து


வண்ண வண்ண மீன்களென -உங்கள்
வடிவின் அழகைப் பார்த்து நான்
எண்ணி எண்ணி மகிழ்கின்றேன்-
நீங்கள்
ஏனோ கிட்ட வருவதில்லை!

எம்.ஆர்.ஆயிஷா, அக்குறனை பா.வித்., அக்குறனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு வித்தியாசங்களில் X அடையாளமிடுக

4







தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.06.27 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 370**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### கூடிய எண்ணிக்கையிலான உருவங்களைக் கொண்ட தொகுதியில் '✓' இடுக

5



### வேற்றுக் கருத்துடைய சொல்லின்கீழ்க் கோடிடுக

1

1. நட்சத்திரம்/ தாரகை/ சூரியன்/ விண்மீன்
2. பானம்/ அம்பு/ கணை/பாணம்
3. வேற்றுமை/குறைபாடு/பேதம்/வித்தியாசம்
4. உண்மை/சத்தியம்/கேண்மை/வாய்மை
5. அப்பு/ஜலம்/புனல்/அக்கினி


### இணைக்க

2

| நாடுகள் | பிரசித்தி பெற்ற அம்சங்கள் |
|---|---|
| 1. ஐக்கிய அமெரிக்கா | 1. கெரெபாகுபாய் வெனே (ஏஞ்சல் நீர்வீழ்ச்சி) |
| 2. எகிப்து | 2. பைஸா கோபுரம் |
| 3. பிரான்ஸ் | 3. சுதந்திரதேவி சிலை |
| 4. இத்தாலி | 4. ஐஃபள் கோபுரம் |
| 5. வெனிசுவெலா | 5. கீஸா பிரமிட் |

### வழி காட்டுங்கள்

3



## அறிவுக்கு விருந்து - 367 விடைகள்


**போட்டி: 01**




**போட்டி: 02**



**போட்டி: 03**



**போட்டி: 04**

1. புகையிரதம்
2. சன்மானம்
3. சுற்றுச்சூழல்
4. பட்டமளிப்பு விழா
5. கடற்கரை

**போட்டி: 05**

1. பிரான்கொய்ஸ் ஹொல்லண்ட்
2. ரோம்
3. சிலப்பதிகாரம்
4. பொன் விழா

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 367 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஜிஹாத் அம்ஹர், ஹங்வெல்ல வீதி, கலகெதர.

**போட்டி: 02**
உ.விதுஷா, திருகோணமலை வீதி, மன்தண்டாவளை.

**போட்டி: 03**
லெ.சந்தோஸ், மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

**போட்டி: 04**
ஷாகிரா பஸால், காலி வீதி, களுத்துறை - தெற்கு.

**போட்டி: 05**
ஏ.ஷுஹ்ரி, மாத்தளை வீதி, கட்டுகஸ்தோட்டை.

**பாராட்டுப் பெறுவோர்:**

* பஸ்ஹா முனவ்வர், வியாங்கல்லை.
* ம.கிஷாந்தினி, குருமன்காடு.
* ஸபியா சாமில், யோனகபுர.
* இஸ்திஹார் அலி, கண்டி.
* கே.டர்ஷிகன், மகா [illegible]
* எம்.குமைஸ், ஏறாவூர்-03.
* எஃப்.றிஸ்வானா, ஹபுகஸ்தலாவை.
* எம்.கமால்தீன், சிலாபம்.
* வை.தினேஷ், பசறை.
* அஹமட் யூனுஸ், [illegible]

## யாருடைய காலணிகளைத் துடைப்பார்கள்?



அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆப்ரகாம் லிங்கன் மிகவும் எளிமையானவர்.

அவரின் பதவிக்காலத்தில் வெள்ளைமாளிகையில் இருக்கும்போது, ஒருமுறை அவர் தனது காலணிகளைத் துடைத்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கே வந்த வெள்ளை மாளிகை ஊழியர் ஒருவர் அந்தக் காட்சியைக் கண்டு ஆச்சரியப்பட்டு, "சேர்! ஜனாதிபதிகள் தங்களுடைய காலணிகளைத் தாங்களாகவே துடைத்துக்கொள்ள மாட்டார்கள்" என்றார்.

உடனே ஆப்ரகாம் லிங்கன் அந்த ஊழியரைப் பார்த்து, "அப்படியென்றால், அவர்கள் வேறு யாருடைய காலணிகளைத் துடைப்பார்கள்?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட அந்த ஊழியர் மறுபேச்சிறாறி வாயடைத்துப் போனார்.

## அறிஞர்கள் சொன்னவை!



* உயர்ந்த லட்சியத்தை அடைய நீண்டதூரம் பயணம் செய்ய வேண்டும்
  - தோமஸ் கார்லைல்.
* எப்படி வாழ வேண்டும் என்று உனக்குத் தெரிந்தால், நீ பல காலம் வாழலாம்
  - ஹென்றி லோங்ஃபெலோ.



* உயர்ந்த லட்சியமுடையவன், பிறர் உயர்வடைவதற்கு உதவுகின்றான்
  - ஹென்றி ஃபோர்ட்.
* உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம், எல்லோரிடமும் மிகவும் பணிவாக இருத்தலே ஆகும்
  - ஜோன் ரஸ்கின்.



* உயர்ந்த எண்ணங்களை உடையவர் ஒருநாளும் தனித்தவராகமாட்டார்
  - சேர். ஃபிலிப் சிட்னி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தர் சிலைகளின் பல்வேறு முத்திரைகள்

## தர்ம சக்கர முத்திரை

தர்ம உபதேசம் செய்யும் முறையை சித்தரிக்கும் முத்திரையாகும். இரு கைகளையும் மணிக்கட்டிற்கு மேலாக மடித்த நிலையில், ஆள்காட்டிவிரலை மடித்து பெருவிரலைத் தொடுமாறு இரு கைகளும் ஒன்றாகச் சேர்ந்திருப்பது தர்ம சக்கர முத்திரையாகும். இதற்கு உதாரணமாகக் கொள்ளப்படுவது சாரணாத்தி லுள்ள புத்தர் சிலையாகும்.



## பூமி ஸ்பர்ஸ முத்திரை



சமாதி நிலையில் பத்மாசனத்தில் உட்கார்ந்து வலது கையை காலின் மேல் வைத்து விரல்கள் நிலத்தை நோக்கி இருக்கும் அமைப்பே பூமி ஸ்பர்ஸ முத்திரையாகும். இதற்கு பூமி சாட்சியாக உள்ளது என்ற கருத்துக் கொள்ளப்படுகின்றது. தம்புள்ள மதவெல ஓவியங்களில் உள்ள புத்தர் உருவங்களில் இந்த முத்திரை காணப்படுகின்றது. ஜப்பான், கொரியா போன்ற நாடுகளில் பூமி ஸ்பர்ஸ முத்திரை தாங்கிய புத்தர் சிலைகள் காணப்படுகின்றன.

ஓவியம் வரைவோம் - 107

ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

## பரதுக துக்கித முத்திரை



இரு கைகளையும் புள்ளடி வடிவில்நெஞ்சை நோக்கி வைத்திருப்பது பரதுக துக்கித முத்திரையாகும். பொலன்னறுவை கல்விகாரையில் இந்த பரதுக துக்கித முத்திரையைக் கொண்ட புத்தர் சிலையைக் காணலாம்.

புத்தர் சிலையமைப்புகளில் மேற்கண்ட முத்திரைகள் மட்டுமன்றி கடக முத்திரை, ஆசிச (ஆசிவ) முத்திரை, அஞ்ஞப்ப முத்திரை எனும் பெயர்களுடன் அழைக்கப்படும் அபிசேக முத்திரை, அஞ்சலி முத்திரை, புத்த பாத்திர முத்திரை, பரிநிர்வான முத்திரை, மகா கருணை முத்திரை, வஜ்ர முத்திரை போன்ற முத்திரைகளும் காணப்படுகின்றன.



கண்டி-கிரிமெட்டியைச் சேர்ந்த முரளி-தயானி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஜகேஷன், 21.06.2012 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர்கள் அனைவரும் பல்லாண்டுகள் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: தனுஷ் பிரதீப்)*



கண்டி-கிரிமெட்டியைச் சேர்ந்த நடராஜா-காயத்திரி தம்பதியரின் செல்வப் புதல்வர்களான பிரதீப்-ஹரிதர்சன் ஆகியோர் 23.06.2012 அன்று தமது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளனர். இவர்களை, குடும்பத்தினர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



ஆரையம்பதி-கிராமக்கோட் வீதியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை-பத்மினி தம்பதியரின் செல்வப் புதல்வி கி.சதுர்ஷா, 17.06.2012 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் ஸ்ரீ சிவனேஸ்வரர் அருளால் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



கண்டி-தெல்தோட்டையைச் சேர்ந்த செல்வகுமார்-யசோதா தம்பதியரின் செல்வப் புதல்வன் எஸ்.விஷால், 16.06.2012 அன்று தனது இரண்டாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்லாண்டுகள் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



ஹப்புத்தளை-விகாரகளை கொலனியைச் சேர்ந்த ஜெயசுந்தர்-சுபாஷினி தம்பதியரின் செல்வப் புதல்வன் நித்திஸ் ஹரன், 14.06.2012 அன்று தனது இரண்டாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்லாண்டுகள் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



பண்டத்தரிப்பைச் சேர்ந்த இராஜேந்திரம்-கேசராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் மதுஷன், 08.06.2012 அன்று தனது பன்னிரெண்டாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் பல்லாண்டுகள் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.




இ.ஹரித்கேஸன், வவுனியா த.மத்.ம.வித்., வவுனியா.




எம்.அத்னான், மீராவோடை, அல்-ஹிதாயா ம.வித்., மீராவோடை.



ஜி.லோகேஸ்வரி, எல்லகந்த தமிழ் வித்., ஹொரணை.



எம்.முஸாதிக், அல்-ஹிஜ்ரா மு.ம.வித்., முள்ளிப்பொத்தானை.



எம்.சல்மான், அல்-இர்பான் மத்.கல்., பொல்கஹவெல.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



லோ.டிலாசினி, சென்.மேரிஸ் ம.கல்., பொகவந்தலாவ.



எஃப்.பர்ஸானா, பாத்திமா பாலிகா ம.வித்., புத்தளம்.



ரா.நிரோஷனி, நல்லாயன் ம.ம.வித்., கொழும்பு-13.




எம்.சாஜித், வளஹவித்தவெவ மு.வித்., பறங்கியாவாடிய.



வி.தெய்வீகன், சித்திவிநாயகர் இ.கல்., மன்னார்.




ந.கோபிராஜ், புனித வளனார் ஆ.வி., இளவாலை.



எஃப்.நிஸ்கா, கெகுணகொல்ல தே.பாட., கெகுணகொல்ல.



எஃப்.ஸபியா, அலிகார் ம.வித்., கன்னலிய.



கே.ரவிகணேஸ்வரன், யகலறாவை த.வித்., வெளிமடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முயலின் கர்வம்

அடர்ந்த காட்டில் முயல் ஒன்று வசித்து வந்தது. அதன் அருகேயுள்ள புதரில் முள்ளம் பன்றியும் வசித்து வந்தது. இரண்டும் நட்பாகப் பழகின.

முயல் வெள்ளை நிறத்தில் கொழு கொழுவென அழகாக இருந்தது. அது தனது அழகை எண்ணிப் பெருமைப்பட்டுக்கொள்ளும். முள்ளம்பன்றி தன்னைவிட அழகில் குறைந்தது என்ற எண்ணமும் அதன் மனதில் குடிகொண்டிருந்தது. அதனால், முள்ளம் பன்றியைப் பார்க்கும் போதெல்லாம் கேலி செய்யும்.

ஒருநாள், முயல் தனது உணவைத் தேடி அலையும் போது, புதரில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியைக் கண்டது. அதில் தனது உருவத்தைப் பார்த்தபோது, அது மிகவும் அழகாகத் தெரிந்ததால் பெரும் மகிழ்ச்சி அடைந்தது.

கண்ணாடியை எடுத்துச் சென்று தன் அறையில் வைக்க வேண்டும் என்றும் முள்ளம்பன்றியிடமும் கண்ணாடியைக் காட்ட வேண்டும் என்றும் முயல் எண்ணிக்கொண்டது. அதன்படி, தன் அறைக்குக் கண்ணாடியை எடுத்துச்சென்ற முயல் அவ்வப்போது கண்ணாடியைப் பார்த்துத் தனது அழகை மெச்சிக் கொண்டது.

ஒருநாள் கண்ணாடியில் தன் அழகைக் காட்ட முள்ளம்பன்றியை அழைத்தது முயல். ''நண்பனே, இதோ, இந்தக் கண்ணாடியைப் பார்! எனது அழகை இது அப்படியே காட்டுகிறது. நீ பொறாமைப்படாதே. நீ பார்த்தால் உன் அவலட்சணமான தோற்றம்தான் இதில் தெரியும். என்ன செய்ய, கடவுள் என்னை இவ்வாறு அழகாகப் படைத்துவிட்டு உன்னை அழகற்றவனாகப் படைத்துவிட்டாரே?'' என்று பரிகாசமாகப் பேசியது.

முள்ளம்பன்றியும் எதுவும் பேசாமல் அமைதியாக நின்றது. ஆனால், முயல் தன்னை மறந்து கண்ணாடியில் தன் அழகை ரசித்துக்கொண்டிருந்தது.

அப்பொழுது இரைதேடி வந்த நரி ஒன்று அந்த முயலைப் பார்த்துவிட்டு, அதனைப் பிடிக்கத் தாவி வந்தது.

திடீரென நரியை வெகு அருகில் பார்த்த முயல் வெலவெலத்துப்போய் தப்பி ஓட வழி தெரியாமல் திகைத்துப் போனது.

அச்சமயம் சற்றும் தாமதிக்காமல் முள்ளம்பன்றி தனது உடலைச் சிலிர்த்துக்கொண்டு நரியின் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கியது. அதன் கூரிய முட்கள் நரியின் முகத்திலும் உடலிலும் கீறிக் கிழித்தன. இதனால், வலி தாங்க முடியாத நரி ஊளையிட்டுக் கொண்டே அவ்விடத்தை விட்டு ஓடியது.

அதிர்ச்சியில் இருந்து விலகாத முயல் நடுங்கியபடி நின்றது.

அதன் அருகில் வந்த முள்ளம் பன்றி, ''நண்பனே! பயப்படாதே, நரி ஓடிவிட்டது. நீ அழகானவன் என்று கர்வப்பட்டாய். ஆனால், கடவுளின் ஒவ்வொரு படைப்பிற்கு ஓர் அர்த்தம் உண்டு என்பது இப்போது உனக்குப் புரிந்திருக்கும் என நினைக்கிறேன்'' என்றது.

தனது அழகின்மீது கர்வம் கொண்டிருந்த முயல், தனது செயலை எண்ணி வெட்கித் தலைகுனிந்ததோடு, தனது நண்பனாகிய முள்ளம்பன்றியிடம் மன்னிப்புக் கேட்டது!

# ஆசிரியர் உணர்த்திய உண்மை!

விடுமுறை நாட்களில் தன் வீட்டுத் தோட்டத்தில்தான் இருப்பான் பவித்ரன். பாடசாலை நாட்களிலும் மாலைநேரங்களில் தோட்டத்துக்கு வந்து போவான்.

தோட்டத்தில் அவனது தந்தையின் பராமரிப்பால் பலவித பூக்கள் செடிகளில் பூத்துக் குலுங்கின. எலுமிச்சை, மாம்பழம், மாதுளை-போன்ற பழ வகை மரங்களும் காய்த்துத் தொங்கின.

அதனால், தோட்டத்தில் கண்ணைக் கவரும் விதமான வண்ணத்துப்பூச்சிகள், தேனீக்கள், தும்பிகள் பறந்து திரிந்தன.

பவித்ரன் இந்தப் பூச்சிகளை ஒவ்வொன்றாக விரட்டிப் பிடிப்பான். வண்ணத்துப்பூச்சி கிடைத்தால் அதன் இறக்கையை மட்டும் கசக்கி விடுவான். அது பறக்க முடியாமல் தவிப்பதை ரசிப்பான். சற்று நேரத்தில் அது இறந்து எறும்புகளுக்கு இரையாகிவிடும்.

அதேபோன்று, தும்பி அகப்பட்டால் அதன் வாலில் நூலைக் கட்டிப் பறக்க விடுவான். எதுவுமே அவனிடம் சிக்காமல் போனால், நீண்ட மெலிதான கழியை கையில் எடுத்து அதை வீசி, வீசி பூச்சிகளைத் தாக்குவான். அவன் தாக்குதலில் பல வண்ணத்துப் பூச்சிகள், தும்பிகள் உடல் சிதறி இறக்கும்.

பூக்களையும் பழங்களையும் இந்தப் பூச்சிகள் சேதப்படுத்துவதாக எண்ணித்தான் பவித்ரன் இவ்வாறு பூச்சிகளை விரட்டி அடித்தான். கொன்று குவித்தான்.

இதேவேளை, ஒருநாள் விஞ்ஞான பாட ஆசிரியர் மகரந்தச் சேர்க்கை பற்றிய பாடத்தை நடத்தினார்.

''செடிகளும் மரங்களும் தங்களது பூக்களின் அழகால் பூச்சிகளை தங்கள் பக்கம் கவர்ந்து இழுக்கின்றன. பூச்சிகள் பூக்களில் உள்ள தேனை உறிஞ்சுகின்றன. அப்போது பூக்களில் உள்ள மகரந்தம் பூச்சிகளின் கால்கள்மீது ஒட்டிக்கொள்கின்றது. பூச்சி அடுத்த மலருக்குச் செல்லும்பொழுது, அவற்றின் கால்களில் உள்ள மகரந்தம் அந்தப் பூக்களில் பட்டு மகரந்தச் சேர்க்கை ஏற்படுகின்றது. அதனால், செடிகளும் மரங்களும் 'சூல்' கொண்டு காய்களையும் கனிகளையும் தருகின்றன''

ஆசிரியர் இப்படி விளக்கம் கூறிய பிறகுதான், பவித்ரனுக்குத் தான் பூச்சிகளைக் கொன்றதும் விரட்டியடித்ததும் பெரும் தவறு என்பது புரிந்தது. 'ஐயோ, எவ்வளவு பெரிய தவறு செய்திருக்கிறோம்'' என்று வருந்தினான். தங்கள் தோட்டத்தில் காய்கனிகள் காய்க்க உதவிய வண்ணத்துப்பூச்சிகள், தும்பி, தேனீக்களை இனி அடிப்பதில்லை என்று உறுதிகொண்டான்.





# எலியின் சாகசம்

ஒரு நாட்டில் இளவரசர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த போர் வீரர். அவருடைய வாள் வீச்சிற்கு எவரும் ஈடு கொடுக்க முடியாது. அந்த அளவிற்கு மிகச் சிறந்த வீரர். அவர் ஒருமுறை அரண்மனையில் வாள்ப் பயிற்சி செய்துகொண்டிருக்கையில், எலி ஒன்று குறுக்கே ஓடியது. உடனே அதன்மீது வாளை வீசினார் இளவரசர். அந்த எலியோ மிக லாவகமாக தப்பித்துச் சென்றது. இளவரசர் மீண்டும் அதனைத் துரத்தித் துரத்தி வாளை வீசினார் இளவரசர். மீண்டும் அது தப்பித்து வளைக்குள் புகுந்து கொண்டது. இதனால், இளவரசர் மனம் உடைந்து போனார்.

அப்போது அங்கு வந்த அரசர் ''என் சோகமாக இருக்கிறாய்?'' எனக் கேட்க ''இந்த நாட்டில் உள்ள எவரும் எனது வாள் வீசும் திறமைக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில், இந்த சாதாரண எலியை என்னால் கொல்ல முடியவில்லையே!'' என இளவரசர் விவரித்தார். மன்னர் சிரித்துவிட்டு ''எலியைக் கொல்ல வாள் பயிற்சி எதற்கு? அரண்மனைப் பூனையைக் கொண்டு வந்தாலே போதுமே!'' என்றார்.

உடனே அரண்மனைப் பூனை வரவழைக்கப்பட்டது.

அந்தப் பூனையும் எலியை வேட்டையாட முயன்றது. ஆனாலும், அந்த எலி மிக எளிதாக அதனிடம் இருந்து, தப்பித்துச் சென்றது. இதனால், மீண்டும் இளவரசரும் அரசரும் சோகமானார்கள். அப்போது மந்திரி அங்கு வந்தார். ''என்ன அரசே... நீங்களும் இளவரசரும் சோகமாக இருக்கிறீர்கள்?'' என்று வினவினார்.

அதற்கு அரசர் நடந்ததைக் கூறி ''நம் நாட்டுப் பூனைகள் எதற்குமே பிரயோசனம் இல்லை. ஆனால், ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் உள்ள பூனைகள் புலி உயரம்வரை உள்ளன. எனவே, அங்கிருந்து பூனைகளை வரவழைப்போம்'' என்றார்.

அவ்வாறே, அந்த நாடுகளில் இருந்து பூனைகள் வரவழைக்கப்பட்டன. ஆனால், அவற்றிடமிருந்தும் அந்த எலி சாமர்த்தியமாகத் தப்பித்துச் சென்று வளைக்குள் புகுந்தது.

எலிக்கு இவ்வளவு திறமையா! என அனைவரும் வியந்துகொண்டிருக்கையில், அங்கே இருந்த அரண்மனைக் காவலன் ஒருவன் ''இளவரசே! இந்த எலிக்குப் போய் ஜப்பான், சீனப் பூனையெல்லாம் எதற்கு? எங்க வீட்டுப் பூனையே போதும்'' என்றான்.

எனினும், மன்னருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ''என்ன.... அரண்மனையில் வளர்ந்து வரும் பூனையால் முடியாதது சாதாரண பூனையால் முடியுமா?'' என்றார். உடனே இளவரசர், ''சரி... எடுத்து வா உனது பூனையை'' என்றார். வீட்டிற்குச் சென்று தனது பூனையைக் கொண்டு வந்தான் காவலன். அந்தப் பூனை அங்கிருந்த எலியை ஒரே தாவலில் 'லபக்' என்று கௌவிச் சென்றது.

இதனைப் பார்த்த இளவரசருக்கு மிகவும் ஆச்சரியம். ''என்ன இது அதிசயம்! ஜப்பான், சீன அரண்மனைகளில் வளர்ந்த பூனைகளிடம் இல்லாத திறமை எப்படி இந்தச் சாதாரண பூனைக்கு ஏற்பட்டது? எப்படி இது சாத்தியம்? என்ன பயிற்சி கொடுத்துப் பூனையை வளர்த்தாய்?'' என்று வியந்தவாறே கேள்விகளை கேட்கத் தொடங்கினார். அதற்குக் காவலாளி ''பெரிதாக என் பூனைக்குப் பயிற்சிகள் எதுவும் நான் கொடுக்கவில்லை இளவரசே... என் பூனைக்கு ரொம்பப் பசி அவ்வளவுதான்'' என்றான்.

இளவரசருக்கு 'சுரீர்' என்றது. அரண்மனைக்குள் பூனைகள் நன்கு தின்று கொழுத்திருப்பதால் அவற்றுக்குப் பசி என்பதே என்னவென்று தெரிய வாய்ப்பில்லை. எனவே, அவற்றால் எலியை எப்படிப் பிடிக்க முடியும்? ஆக, எந்த ஒரு வேலையையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டுமென்றால், முதலில் அதனைப் பற்றிய பசி அல்லது தேவை இருக்கவேண்டும். அப்போதுதான் அந்தக் காரியத்தை கச்சிதமாக செய்து முடிக்க முடியும் என்ற உண்மையை உணர்ந்துகொண்டார் இளவரசர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் அண்ணாவுக்கும் தம்பிக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்

**மல்லி:** **අයියේ! දැන් වෙසක් එකත් ළඟයි නේද?**
அய்யே! தென் வெசக் எகத் லங்கய் நேத?
**தம்பி:** **அண்ணா! இப்போது வெசாக்கும் நெருங்கிவிட்டதுதானே?**

**அயியா:** **ඔව් මල්ලි, ඇයි?**
ஒவ் மல்லி, எய்?
**அண்ணா:** **ஆம் தம்பி, ஏன்?**

**மல்லி:** **අපි වෙසක් කූඩු හදන්නේ නැද්ද?**
அப்பி வெசக் கூடு ஹதன்னே நெத்த?
**தம்பி:** **நாங்கள் வெசாக் கூடுகள் செய்வதில்லையா?**

**அயியா:** **හදන්න ඕනේ මල්ලි.**
ஹதன்ன ஓனே மல்லி.
**அண்ணா:** **செய்ய வேண்டும் தம்பி.**

**மல்லி:** **අපි දැන් ඉඳලම හදමු. නැත්නම් කල් නැහැ.**
அப்பி தென் இந்தலம ஹதமு. நெத்நம் கல் நெஹெ.
**தம்பி:** **நாங்கள் இப்போதிலிருந்தே செய்வோம். இல்லாவிட்டால் நாள் போதாது.**

**அயியா:** **අපි මේ සෙනසුරාදා හදමු.**
அப்பி மே செனசுராதா ஹதமு.
**அண்ணா:** **நாங்கள் இந்தச் சனிக்கிழமை செய்வோம்.**

**மல்லி:** **අයියේ! මොනවද ඕනේ කියල කියන්න. මම හොයලා තියන්නම්.**
அய்யே! மொனவத ஓனே கியல கியன்ன. மம ஹொயலா தியன்னம்.
**தம்பி:** **அண்ணா! என்ன வேண்டுமென்று சொல்லுங்கள். நான் தேடி வைக்கிறேன்.**

**அயியா:** **බට පතුරු ඕනේ. සව් කොල ඕනේ. පාප්ප ඕනේ. හීනි කම්බි ඕනේ.**
பட பதுறு ஓனே. சவ் கொல ஓனே. பாப்ப ஓனே. ஹீனி கம்பி ஓனே.
**அண்ணா:** **மூங்கில் வேண்டும். டிஷு கடதாசி வேண்டும். பசை வேண்டும். மெல்லிய கம்பி வேண்டும்.**

**மல்லி:** **බට පතුරු මම හොයලා තියන්නම්. අක්කාට කියලා පාප්ප හදා ගනිමු.**
பட பதுறு மம ஹொயலா தியன்னம். அக்காட்ட கியலா பாப்ப ஹதா கனிமு.
**தம்பி:** **மூங்கில்களை நான் தேடி வைக்கின்றேன். அக்காவிடம் கூறி பசை செய்துகொள்வோம்.**

**ඔයා සව් කොලයි හීනි කම්බියි ගේන්න.**
ஓயா சவ் கொளய் ஹீனி கம்பிய் கேன்ன.
**நீங்கள் டிஷு கடதாசியும் மெல்லிய கம்பியும் கொண்டுவாருங்கள்.**

**அயியா:** **හොඳයි මල්ලි.**
ஹொந்தய் மல்லி.
**அண்ணா:** **நல்லது தம்பி.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. நாங்கள் வெசாக் கூடு செய்வோம்.
........................................................................................

ii. இந்தச் சனிக்கிழமை செய்வோம்.
........................................................................................

iii. மூங்கில்களை நான் தேடி வைக்கின்றேன்.
........................................................................................

**இடைவெளிகளை நிரப்புக**

1. .................. කූඩු හදන්නේ නැද්ද?
2. මොනවද .................. කියල කියන්න.
3. සව් .................. ඕනේ.






உடன்பாடு வாக்கியங்களை (Affirmative Sentence) தன்கூற்று (Direct Speech) நிலையில் இருந்து, பிறர் கூற்று (Indirect Speech) நிலை வாக்கியங்களாக மாற்றியமைக்கும்போது ஏற்படுகின்ற மாற்றங்களை மேலும் உதாரணங்கள் மூலம் இங்கே பயில்வோம்.

(அ) ரஞ்ஜித் கூறினான், ''அது என்னுடைய தவறு'' என்று.
Ranjith said, "It is my fault."
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஆ) அது தன்னுடைய தவறு என ரஞ்ஜித் கூறினான்.
Ranjith said that it was his fault.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

**குறிப்பு:** மேற்படி தன் கூற்று (அ) வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, 'is' எனும் நிகழ்கால துணை வினைச்சொல், பிறர் கூற்று வாக்கியத்தில் 'was' என இறந்தகால வடிவத்துக்கு மாற்றப்பட்டுள்ளதை கவனத்தில்கொள்ள வேண்டும்.

(இ) சுஜாதா கூறினாள், ''நான் இப்பொழுது மிக வேலையாக இருக்கின்றேன்'' என்று.
Sujatha said, "I am very busy now."
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஈ) தான் இப்பொழுது மிக வேலையாக இருப்பதாக சுஜாதா கூறினாள்.
Sujatha said that she was very busy then.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect Speech)

**குறிப்பு:** மேற்படி (இ) தன் கூற்று வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'am' எனும் நிகழ்கால துணை வினைச்சொல், 'was' என இறந்தகால வடிவத்துக்கு மாற்றப்பட்டுள்ளதையும் அவ்வாறே, 'now' என்பது 'then' என மாற்றப்பட்டுள்ளதையும் பிறர் கூற்று வாக்கியத்தில் அவதானிக்கலாம்.

(உ) ஆசிரியர் கூறினார், ''நான் ஆங்கிலம் கற்பித்துக்கொண்டு இருக்கின்றேன்'' என்று.
The teacher said, "I am teaching English."
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஊ) தான் ஆங்கிலம் கற்பித்துக்கொண்டு இருப்பதாக ஆசிரியர் கூறினார்.
The teacher said that he was teaching English.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

**குறிப்பு:** மேற்படி தன் கூற்று (உ) வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, 'I' எனும் பிரதிப் பெயர்ச்சொல், 'he' என மாற்றப்பட்டுள்ளதையும் அவ்வாறே, 'am' எனும் நிகழ்கால வினைச்சொல், 'was' என இறந்தகால வடிவத்துக்கு மாற்றப்பட்டுள்ளதையும் பிறர் கூற்று வாக்கியத்தில் அவதானிக்கலாம்.

(எ) அவன் கூறினான், ''உனது பொதி கீழே விழக்கூடும்'' என்று.
He said, "Your parcel may fall down."
(தன் கூற்று வாக்கியம் -Direct Speech)

(ஏ) எனது பொதி கீழே விழக்கூடுமென அவன் கூறினான்.
He said that my parcel might fall down.
(பிறர் கூற்று வாக்கியம் -Indirect Speech)

**குறிப்பு:** மேற்படி தன் கூற்று (எ) வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள, 'உனது' - Your எனும் பிரதிப் பெயர்ச்சொல், 'எனது' - 'my' என மாற்றப்பட்டுள்ளதையும் அவ்வாறே, 'may' எனும் நிகழ்கால வடிவத்தில் உள்ள துணை வினைச்சொல், 'might' என இறந்தகால வடிவத்துக்கு மாற்றப்பட்டுள்ளதையும் பிறர் கூற்று வாக்கியத்தில் அவதானிக்கலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லெனினின் பதப்படுத்தப்பட்டுள்ள உடல் அடக்கம் செய்யப்படவுள்ளது

சோவியத் ஒன்றியத்தை (Soviet union) உருவாக்கியவரும் கொம்யூனிஸ்ட் வாதியுமாகிய லெனினின் பதப்படுத்தப்பட்ட உடல் 88 வருடங்களின் பின்னர் அடக்கம் செய்யப்படவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தொழிலாளர்களின் உரிமைக்காக குரல் கொடுத்து மாபெரும் போராட்டங்களை நடத்தி வெற்றியும் கண்டிருந்த லெனின்மீது சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த மக்கள் மிகுந்த அபிமானமும், மரியாதையும்



வைத்துள்ளனர். 1924 ஆம் ஆண்டு லெனின் மரணமடைந்தபோது அவருக்கு வயது 53. அவர் மரணமடைந்த போதிலும் அவரது உடல் அடக்கம் செய்யப்படாமல் பதப்படுத்தப்பட்டு இன்றுவரை ரஷ்யாவின் மொஸ்கோ நகரிலுள்ள செஞ்சதுக்கத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டு வருகின்றது.

சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த நாடுகள் தனித்தனியாகப் பிரிந்து சென்ற பின்னரும்கூட லெனினின் உடல் தொடர்ந்தும் மக்களின் பார்வைக்காகவே வைக்கப்பட்டுள்ளது. ஆனால், ரஷ்யாவின் தற்போதைய ஆட்சியாளர்கள் லெனினின் உடலை அடக்கம் செய்வதிலேயே ஆர்வமாக இருப்பதாக தெரிய வருகின்றது. இதன் காரணமாகவே, இன்னும் திகதி குறிப்பிடப்படாத போதிலும் லெனினின் உடல் அடக்கம் செய்யப்படவுள்ளமை உறுதி என்பதை செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# சீனப் பெருஞ்சுவருடன் புதிய பகுதிகள் இணைப்பு

சீனப் பெருஞ்சுவரையொட்டி மேலும் இரண்டு புதிய பகுதிகளை சீன அரசாங்கம் இணைத்துள்ளது. இதன்படி ஏற்கனவே உள்ள சீனப் பெருஞ்சுவருடன் இணைக்கப்பட்ட மேலதிக பகுதியாக இது அமைந்திருக்கும்.

சீனப் பெருஞ்சுவரை பார்வையிட வருகின்ற உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையாலும், மேலும் அதிகமான உல்லாசப் பயணிகளை வரவழைக்கும் நோக்கிலுமே இந்த புதிய வழிமுறையை சீனா கையாண்டிருப்பதாக தெரிய வருகின்றது.

குவாங்சோஸ் மற்றும் ஹியின்கு



எனப்படும் இரண்டு பகுதிகளிலேயே சீனப்பெருஞ்சுவருடன் புதிய பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. கி.மு. 500 வருடங்களுக்கு முன்னர் சீனாவின் எல்லைப் பாதுகாப்பின் நிமித்தம் கட்டப்பட்டதே இந்த சீனப் பெருஞ்சுவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஸ்டீவ் ஜோப்ஸின் அப்பிள் ஏலத்தில்

அப்பிள் நிறுவனத்தை நிறுவிய ஸ்டீவ் ஜோப்ஸினால் உருவாக்கப்பட்ட முதலாவது 'அப்பிள் கொம்ப்யூட்டர்' ஏலத்தில் விடப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



இவ்வாறு ஆரம்ப காலங்களில் பலவகையிலான கணினிகளை அறிமுகம் செய்து அவற்றை அதிக எண்ணிக்கையில் சந்தைப்படுத்திய பெருமை அப்பிள் நிறுவனத்தையே சாரும்.





தற்போது ஏலத்தில் விடப்படவுள்ள கணினியானது 1976 ஆம் ஆண்டிலேயே விற்பனைக்கு வந்தது. அப்போது அதன் விலை 666.66 டொலர்கள் ஆகும். நடைபெறவுள்ள ஏலத்தில் அநேகமாக ஒரு கோடி ரூபாவையும் தாண்டி ஏலத்தில் இது விலைக்கு வாங்கப்படும் என்று முன்கூட்டியே கூறப்பட்டிருந்தது.

## அற்லஸ் கேள்வி - 365

**கேள்வி:** முன்னாள் சோவியத் ஒன்றியத்தை உருவாக்கிய லெனின் எத்தனையாம் ஆண்டு மரணமடைந்தார்?

சரியான விடை..............................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 365,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 363 இன் சரியான விடை: செமிடா மிஸ்ரா**

பரிசு பெறுவோர்

கிரிஷானி,
வெள்ளவத்தை.

எஃப்.முபஷ்ஷரா,
உக்குவலை.

ஜெயக்குமார் ஹரிஷன்,
வவுனியா.

# தெரிந்து கொள்வோம்

* இலங்கையில் பேசப்படும் சொற்களில் அல்விஸ் பொன்சேகா, பேதுறு, பீட்டர், பீரிஸ், பெர்ணான்டோ, செபஸ்தியான், லூசியா, இசிலியா என்ற பெயர்கள் எந்த மொழியிலிருந்து கலந்தன?
  போர்த்துக்கேய மொழியிலிருந்து
* இலங்கையில் காணப்பட்ட மானிய முறையிலான சட்டங்களை அகற்றிவிட்டு ரோமன் டச்சு சட்டங்களை இலங்கையில் புகுத்தியவர்கள் யார்?
  டச்சுக்காரர்கள்



* ஐரோப்பாவில் மிகவும் உயரமான மலைச்சிகரம் 'எல்புரூஸ்' (18,181 அடி) என்பதாகும். வட அமெரிக்கா கண்டத்தில் மிகவும் உயரமான மலைச்சிகரம் எது?
  மெகன்லி மலை - 20,320 அடி




* 'நெஞ்சின் அலைகள்' என்ற நாவலின் ஆசிரியர் யார்?
  அகிலன், இந்த தமிழ் நாவல் ரஷ்யா, ஆங்கிலம் உட்பட, பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அகிலன் ரஷ்யாவில் கௌரவிக்கப்பட்ட தமிழ் எழுத்தாளர் ஆவார்
* ஒரு வருடத்தில் 365 1/4 நாட்கள் உள்ளன. இவை 12 மாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் 31 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை?
  7 மாதங்கள்
* அதிகாரப்பிரிவினை அல்லது வலுவேராக்கல் எனும் அரசியல் கோட்பாட்டை விளக்கிப் புகழ்பெற்றவர் யார்?
  மொன்டெஸ்கியு



* சிங்கப்பூர் நாட்டின் உத்தியோகபூர்வமான அலுவலக மொழிகள் எவை?
  ஆங்கிலம், மலாய், மாண்டரின், தமிழ்
* இலங்கைக்கு முதலில் வந்த ஐரோப்பியர் போர்த்துக்கேயர் ஆவார். இந்தியாவுக்கு முதலில் வந்த ஐரோப்பியர் யார்? எங்கே தமது ஆட்சியை அவர்கள் ஸ்தாபித்தனர்?
  போர்த்துக்கேயர் கொச்சின் பகுதியில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்



* 'இந்தியா-2020' என்ற நூலை எழுதியவர் யார்?
  முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான ஏ.பி.ஜே. அப்துல் கலாம்
* 'புத்தர் புன்னகைத்தார்' என்பது ஒரு தடவை இந்தியா அரசு கையாண்ட 'சங்கேத' சொல்லாகக் கருதப்படுகின்றது. இதன் கருத்தென்ன?
  1972 இல் இந்தியா முதன்முறையாக அணுகுண்டு பரிசோதனை செய்தது. அது வெற்றியடைந்தது என்பதைக் குறிக்கும் சொற்றொடராகும்.



* 'புளூ சிப்ஸ்' என்றால் எதைக் குறிக்கின்றது?
  பங்குச்சந்தையில் மிக மிக மதிப்புள்ள பங்குகளைக் குறிக்கின்றது



* சீனப் பெருஞ்சுவரின் நீளம் எவ்வளவு?
  21,196.8 கிலோ மீற்றர்

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் ஒலிம்பிக்-2012



(கடந்த வாரத் தொடர்ச்சி...)

தொகுப்பு: எஸ்.எல்.ஆர்.மன்சூர்

## போக்குவரத்து

லண்டனில் பொதுப் போக்குவரத்து ஏற்கனவே பலமான நிலையில் உள்ளது. ஆனால், ஒலிம்பிக்கைக் கண்டுகளிக்க வரும் பொதுமக்கள்





அமைவிடங்களுக்கு நேரத்திற்கும் வசதியாகவும் வருகை தருவதனை உறுதி செய்வதற்காக, மேலும் வசதிகள் செய்யப்படுகின்றன. இதற்கென லண்டன் பொதுப் போக்குவரத்து கட்டமைப்பு லண்டன் நிலத்திற்குக் கீழான தள அமைப்பை கிழக்கு லண்டன் எல்லை வரையாக விரிவாக்கியுள்ளது. மேலும் 'டோக்லாண்ட்ஸ்' சிறியரக ரெயில் பாதை (Docklands Light Railway) தரமுயர்த்தப்பட்டுள்ளது. பயணிகளை st. Pancras International இல் (Euro Star அமைந்துள்ளது) இருந்து ஒலிம்பிக் பூங்காவிற்கு ஏற்றிச் செல்கின்ற ஒலிம்பிக் 'ஜவ்லின்' ரெயில் சேவையை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், குறைந்த புகையினை வெளிவிடும் வாகனங்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.



## பசுமை ஒலிம்பிக்

நிலையான ஒலிம்பிக் போட்டியொன்றினை 2012 இல் லண்டனில் நடத்துவதற்குத் திட்டங்கள் நடைபெறுகின்றன. நிலையான லண்டன் 2012 இற்கான ஆணைக் குழுவானது, விளையாட்டுப் போட்டிக்கு மிகவும் வசதியான திகதியை உறுதிப்படுத்துவதற்கு 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பிரதான நோக்கங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

* ஒலிம்பிக் பூங்கா மற்றும் அமைவிடங்களில் குறைந்தளவு காபனை வெளியேற்றும் கட்டடங்களைப் பயன்படுத்தல்.
* அரங்குகளை அமைக்கும் போது, கழிவுகளைக் குறைத்தல்.
* புவியியல் வளங்களைப் பயன்படுத்தல்.
* ஆரோக்கிய வாழ்வை சீர்ப்படுத்தலும் மேம்படுத்தலும்.
* புதிய ஒலிம்பிக் பூங்காவிற்குள்ளேயும் வெளியேயும் உள்ள சமூகங்களுடன்செயற்படுதல்.



## உத்தியோகபூர்வ ஒலிம்பிக் முத்திரை



2012 இல் ஒலிம்பிக் போட்டியின் உத்தியோகபூர்வ முத்திரையானது, வோல்வ் ஒலின்ஸ் (Wolff Olins) என்ற குறி (Brand) அமைக்கும் ஆலோசகரினால் வடிவமைக்கப்பட்டு 2007 ஜூன் மாதம் வெளியிடப்பட்டது. இது நிறங்களில் கிடைக்கப்படுகிறது. இந்த முத்திரை முதன்முறையாக ஒலிம்பிக், பராலிம்பிக் இரண்டையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.



கடந்தகால ஒலிம்பிக் போட்டிகளின்போது, அங்கு நிகழ்வுற்ற சில நிகழ்வுகள் ஒலிம்பிக் உலகில் உள்ள அனைத்து விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமல்ல, விளையாட்டு ரசிகர்களுக்கும் ஓர் கனவு. அங்கே ஆச்சரியங்களுக்குப் பஞ்சமில்லை. அவ்வாறு அரங்கேறியவை உங்களுக்கு ஆச்சரியத்தைக்கூடத் தரலாம்.

*(அந்த ஆச்சரியங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்)*

# ஒலிம்பிக் சுடர் ஏந்தும் இலங்கை மாணவர்கள்



இந்த வருடம் (2012) லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஒலிம்பிக் சுடரை ஏந்திச் செல்லும் வாய்ப்பு இலங்கையைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

கண்டி சில்வெஸ்டர் கல்லூரியைச் சேர்ந்த இசுமுறு டில்ஷான் மற்றும் மொஹமட் அசார்டீன் ஆகியோருக்கே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒலிம்பிக் சுடரானது 'டரம்' எனும் மாநிலத்திற்கு கொண்டுவரப்படுவதை முன்னிட்டு அதனைக் கொண்டாடும் முகமாக அந்த மாநிலத்தில் சர்வதேச விளையாட்டு விழாவொன்று நடைபெறுகின்றது. இதில் 11 நாடுகளைச் சேர்ந்த 15 வயதிற்கு உட்பட்ட 480 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றவுள்ளனர். இந்தக் குழுவிலேயே, குறித்த இலங்கை மாணவர்களும் இடம்பெற்றுள்ளனர்.

# நியூஸிலாந்தின் பயிற்றுனராக வருமாறு ஃபிளேமினுக்கு அழைப்பு



நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் பிரதான பயிற்றுனர் பதவிக்கென விடுக்கப்பட்டுள்ள அழைப்பிற்கு அந்த அணியின் முன்னாள் வீரர் ஸ்டீவன் ஃபிளேமின் இன்னமும் சரியான பதிலை வழங்கவில்லை என்று தெரிய வருகின்றது.

தற்போது நியூஸிலாந்து அணியின் பயிற்றுனராகப் பணியாற்றி வருகின்ற ஜோன் ரைட்டின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூலை மாதத்துடன் நிறைவடைவதையொட்டியே, அப்பதவிக்கு ஃபிளேமினுக்கு அந்நாட்டின் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்துள்ளது.

முடிவடைந்த ஐ பி எல் போட்டிகளில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு பயிற்றுனராக செயற்பட்ட ஃபிளேமிங் 2008 ஆம் ஆண்டில் சர்வதேச கிரிக்கெட் களத்திலிருந்து ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தமது ஓய்வினையடுத்து, விளையாட்டுத்துறை முகாமைத்துவ நிறுவனமொன்றையும் நடத்தி வந்தார்.

2009 ஆம் ஆண்டிலும் இதேபோல் ஃபிளேமிங்கிற்கு நியூஸிலாந்து அணிக்கான பயிற்றுனராக வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த சந்தர்ப்பத்திலும் ஃபிளேமிங் அந்த அழைப்பை நிராகரித்தார்.

இதேவேளை, தற்போது மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள ஃபிளேமிங், பயிற்றுனராகப் பொறுப்பேற்க பின்னிற்பதற்குக் காரணம் சுயநலமெனக் கருத வேண்டாம் என்றும் கடந்த இரண்டு மாதங்களிலும் ஐ பி எல் போட்டிகளிலேயே, மூழ்கியிருந்தமையால் எந்தவொரு தீர்மானத்தையும் எடுப்பதற்கு முன்னர் கால அவகாசம் தேவை என்றும் தெரிவித்துள்ளார்.

# பிரெஞ்ச் டென்னிஸில் செம்பியனானார் ஷரபோவா



பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா முதல் தடவையாக செம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். மேற்படி பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் இறுதிப் போட்டி மற்றும் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இத்தாலியின் சாரா எர்ராணியும், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவும் மோதினார்கள். இதில் முதலாவது செட்டை 6-3 என்ற கணக்கில் 36 நிமிடங்களில் வெற்றி கண்ட ஷரபோவா இரண்டாவது செட்டை 6-2 என்ற கணக்கில் 54 நிமிடங்களில் வெற்றி கொண்டு நேர் செட் கணக்கில் செம்பியன் கிண்ணத்தை வெற்றிகொண்டார்.

வெற்றி பெற்ற ஷரபோவாவிற்கு 19.5 கோடி ரூபாவும், தோல்வியுற்ற எர்ராணிக்கு 11.5 கோடி ரூபாவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கெவின் பீற்றர்சன் ஓய்வை அறிவிப்பு




இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் கெவின் பீட்டர்சன் சர்வதேச ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு முதலாவது போட்டிகளில் கலந்துகொண்ட இவர் இதுவரை 127 ஒருநாள் போட்டிகளில் கலந்துகொண்டு 4,184 ஓட்டங்களைப் பெற்றுள்ளதுடன், 36 சர்வதேச 'டுவென்டி டுவென்டி' போட்டிகளில் கலந்துகொண்டு 1,176 ஓட்டங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் விதிமுறைப்படி, ஒரு வீரர் ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தால் அவர் இயல்பாகவே 'டுவென்டி டுவென்டி' போட்டியிலிருந்தும் ஓய்வுபெற்றவராகவே கருதப்படுவார். அதன்படியே, மேற்படி இரண்டு போட்டிகளிலிருந்தும் கெவின் பீட்டர்சன் ஓய்வுபெற்றவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

தனது ஓய்வு குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பீற்றர்சன், "நன்றாகச் சிந்தித்த பிறகே, இந்த முடிவை நான் எடுத்தேன். 32 வயதை எட்டுவதால் உடல் சுகவீனமும், உபாதைகளும் ஏற்படுகின்றன. ஆகவே, புதியவர்களுக்கு வழிவிடுவதற்கு ஓய்வுபெறுவதே சிறந்த வழி என்பதை உணர்ந்தமையால் ஓய்வை அறிவித்துள்ளேன்" என்று கூறுகின்றார். ஒருநாள் போட்டியில் கெவின் பீற்றர்சன் 9 சதங்களையும், 23 அரைச் சதங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூமியைவிட நிலவில் அதிகளவு டைட்டானியம்


பூமியைவிட நிலவில் அதிகளவு டைட்டானிய உலோகம் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவினால் சந்திரனில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்ட 'லூனார் ரிக்கான்ஸியன்ஸ் ஓர்பிட்டர்' என்ற விண்கலத்தில் பொருத்தப்பட்ட கெமராக்களால் 7 வித்தியாசமான ஒளி அலைகளில் எடுக்கப்பட்ட படங்களை ஆராய்ந்ததை அடுத்தே, இதனைக் கண்டறிந்துள்ளனர்.

இது தவிர, 1972 ஆம் ஆண்டு அப்பலோ 17 என்ற விண்கலத்தில் சந்திரனை நோக்கிப் பயணித்த விண்வெளி வீரர்களால் சந்திரனில் இருந்து கொண்டுவரப்பட்ட பாறைத் துண்டுகளுடனும் இந்தப் படங்கள் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டுள்ளன.

இது குறித்து அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழக விஞ்ஞானி மார்க் ரொபின்சன் கூறியதாவது,

''சந்திரனைப் பூமியில் இருந்து பார்த்தால் சாம்பல் நிறம் பூசியது போல தோற்றம் அளிக்கிறது. ஆனால், தகுந்த கருவிகளுடன் பார்த்தால், சந்திரன் பல நிறங்களில் ஒளிர்வது தெரியும். இதன் மூலம் சந்திரனில் பல வேதிப் பொருட்கள் உள்ளதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. பூமியில் உள்ளதை விட, இரும்பு மற்றும் டைட்டானிய தாதுக்கள் சந்திரனில் அதிகளவில் காணப்படுகின்றன என்பதை உணர முடியும். டைட்டானியம் என்பது இரும்பைவிட உறுதியானது. ஆனால், எடை குறைந்தது. இதனால், அதிக விலை மிக்கதாக உள்ளது'' என்றார்.







பூமியில் டைட்டானியம் மிகக் குறைந்த அளவில் அதாவது 1 சதவீதம் மட்டுமே காணப்படுகிறது. ஆனால், தற்பொழுது சந்திரன் தொடர்பான ஆராய்ச்சிகளின் மூலம் சந்திரனில் 10 சதவீதத்திற்கும் அதிகமான அளவு டைட்டானியம் உள்ளதாக தெரியவந்துள்ளது. மேலும், சந்திரனில் ஒக்சிசன், ஹைட்ரஜன், ஹீலியம் உள்ளிட்ட வாயுக்கள் உள்ளதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

# சுற்றுலாப் பயணிகளை விண்வெளிக்குக் கொண்டுசெல்லும் 'ஸ்பேஸ் எக்ஸ் டிரகன்'

**விண்வெளியை நோக்கி சுற்றுலாப் பயணம் ஒன்றை மேற்கொள்ள விரும்பும் விண்வெளிச் சுற்றுலாப் பயணிகளுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள 'ஸ்பேஸ் எக்ஸ் டிரகன்' எனும் விண்வெளி கெப்சியூலானது, புவிச்சுற்றுப்பாதையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணையவுள்ளது.**






# மூன்று நாடுகளில் பாரிய தொலைநோக்கிகள்





உலகின் அதிக சக்திவாய்ந்த வானொலி அலை தொலைநோக்கிகள் தென் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய மூன்று நாடுகளிலும் அமைக்கப்படவுள்ளன. மூவாயிரம் ரேடியோ என்டெனாக்கள் கொண்டு உருவாகும் இந்தப் பாரிய தொலைநோக்கிகள், ஒன்றோடு ஒன்று விலகிச் சென்றுகொண்டிருக்கின்ற அதாவது, ஆயிரக்கணக்கான கிலோமீற்றரில் பரந்திருக்கும் பல்லாயிரக் கணக்கான என்டெனாக்களில் இருந்து வரும் சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்ளும்.

இந்த தொலைநோக்கிகளூடாக, உலகம் பற்றிய அடிப்படையான பல கேள்விகளுக்கும் வேற்றுக் கிரகங்களில் உயிரின வாழ்க்கை குறித்த சாத்தியப்பாடு தொடர்பாகவும் பதில் கிடைக்கும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். தற்போது பயன்பாட்டில் இருந்து வருகின்ற தொலைநோக்கிகளைவிட, பத்தாயிரம் மடங்கு வேகமாகவும் ஐம்பது மடங்கு துல்லியமாகவும் இந்தப் புதிய தொலைநோக்கிகள் செயல்படும் என தெரிவிக்கப்படுகின்றது. 1.5 பில்லியன் யூரோ செலவில் இந்த தொலைநோக்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் முதலாவது கட்டம் 2015/16 ஆம் ஆண்டுகளில் 360 மில்லியன் யூரோக்கள் செலவில் நிறைவேற்றப்படும். இதற்கான பணிகள் 2013 இல் ஆரம்பமாகும் என மேலும் அறியக்கிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்: மருத்துவம்

# நீல்ஸ் ரைபெர்க் ஃபின்ஸன்

கதிரியக்க முறையினை முதன்முதலாக மருத்துவத் துறைக்கு அறிமுகம் செய்து, அது தொடர்பான ஒரு புதிய பாதையை வகுத்துத் தந்த முன்னோடிதான் நீல்ஸ் ரைபெர்க் ஃபின்ஸன். அக்கால கட்டத்தில் லூபஸ் வல்கரிஸ் (Lupus Vulgaris) எனும் ஒருவகையான நோய் மருத்துவத்துறைக்குப் பெரும் சவாலாக இருந்தது. தோலின்மீது குண்டு குண்டாக காளான்போல் முளைத்தபடி ஏற்படும் ஒரு கொடிய நோய்தான் இந்த லூபஸ் வல்கரிஸ். போதாக் குறைக்கு முகமெங்கும் கட்டிகளாக உருவாகி சொல்லொணா வலியை வேறு தரும். இந்த நோய்க்கு கதிரியக்கமே தீர்வு எனக் கண்டு அச்சிகிச்சை முறையினைப் பிரயோகித்து வெற்றியும் பெற்றார். இதற்காக 1903 ஆம் ஆண்டிற்குரிய மருத்துவ சாதனையாளருக்கான நொபெல் பரிசும் நீல்ஸ் ரைபெர்க் ஃபின்ஸனுக்குக் கிடைத்தது.

1860 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதி ஃபின்ஸன் ஐரோப்பாவின் டென்மார்க் நாட்டில் பிறந்தவராவார். பள்ளிப்பருவத்தில் கல்வியில் பின்தங்கியிருந்த காரணத்தால் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் இவர் இகழப்பட்டார். இதனால், சிறுவன் ஃபின்ஸன் தனது தந்தையின் முன் கண்கலங்கி நின்றான். அதனைக் கண்ட தந்தை கலங்கிப்போனார். "என்னை எல்லோரும் மடையன் என்கின்றனர். எனக்கு பாடசாலை செல்ல விருப்பமில்லை. நீங்களே பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடாதா?" என கண்ணீர்மல்க மகன் தந்தையைப் பார்த்துக் கேட்டான். அவ்வாறு கற்றுக்கொடுத்தால் படித்துக்காட்டுவதாகவும் உறுதி வழங்கினான். தந்தையாரும் விழித்துக்கொண்டு மகன் சொன்னது போலவே செய்தார். இதனால், மருத்துவக் கல்லூரிக்கு செல்லும் அளவிற்கு மளமளவென அவனது கல்வி விருத்தியானது.

1890 ஆம் ஆண்டு மருத்துவ கலாநிதிப் பட்டம் பெற்ற பின்னர் மருத்துவக் கல்லூரிகளில், தேவையான விலங்குகளை அறுத்து அதுபற்றிய விளக்கங்களை ஆசிரியர் கற்பிப்பதற்கு உதவும் பதவியாகிய 'ப்ரொஸெக்டர்' எனும் பதவி இவருக்கு கிடைத்தது. மூன்று ஆண்டுகள் அதில் பணிபுரிந்தபின் ஒளியியலை மருத்துவத்திற்குப் பயன்படும்படியான ஆக்கபூர்வமான ஆய்வுகளில் இறங்கினார். ஒளி மருத்துவம் (Photo-therapy) என்ற ஒரு தனித் துறையையே மருத்துவ இயலுக்கு அமைத்துக் கொடுத்த இவரது சாதனை மிக மகத்தானது.

அத்துடன், மின்னியலில் Sinusoidal அலைவரிசை என்பது மிகவும் பிரசித்திபெற்றே காணப்படுகிறது. இந்த Sinusoidal முறையில்தான் நம் வீட்டுக்கு A/C கரன்ட் எனும் மின்சாரம் வந்துகொண்டிருக்கின்றது. இவ்வாறே அனைத்து இயக்கங்களையும் அலைவரிசைகள் கொண்டு வர்ணிக்க முடியும். ஒளி அலைகளில் அடுத்தடுத்து வரும் இரண்டு வெவ்வேறு அலைவரிசைகளுக்கிடையிலான தூரம் Wavelength என அழைக்கப்படும். இதனை மருத்துவத்துறையில் ஆக்கபூர்வமான மருத்துவச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த முடியும் என ஃபின்ஸன் கருதினார். இதையே இலக்காகக்கொண்டு, ஒளிக் கற்றைகள், அவற்றின் கதிர் வீச்சு, விதவிதமான வண்ணவிளக்குகளின் ஒளி என்பன எமது உடலின் தோலில் உருவாக்கவல்ல வினைகளை ஆராய்ந்தார்.

தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு 'ஒளி' சிறந்த சிகிச்சையாக அமையும் என விளக்கம் அளித்து 1893 மற்றும் 1896 ஆம் ஆண்டுகளில் இரு கட்டுரைகளை வெளியிட்டார். அவைதான் On the effects of light on the skin மற்றும் The use of concentrated chemical light rays in medicine என்ற கட்டுரைகளாகும். இது மருத்துவத்துறைக்குக் கிடைத்த கொடைகளாகும். அதுவரை குணமாக்க முடியாது எனக் கருதப்பட்ட Lupus Vulgaris என்ற நோய்க்கு ஃபின்ஸனின் ஒளி மருத்துவமே நிரந்தரத் தீர்வு தந்தது.


(1860-1904)

ஒளி மருத்துவ ஆய்வின் உச்சியைத் தொட்ட பின்னரும்கூட, உணவில் சேர்க்கப்படும் உப்பு மீதான ஆய்வுகளை ஃபின்ஸன் தொடர்ந்தார். எனினும், அதற்குள்ளாக அவரின் உடல்நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. எனினும், உடல் குன்றியதே தவிர, மனம் குன்றவேயில்லை. உணவில் சேர்க்கப்படும் உப்பில் சோடியத்தின் அளவு குறைவதால் ஏற்படும் குறைபாடுகளைப் பட்டியலிட்டார். இதுவே இவருடைய இறுதி ஆய்வாகும். அந்தவகையில், உப்பில் சோடியத்தின் அவசியத்தை முதன்முதலில் உணர்த்தியவரும் இவரேயாவார்.

இவர் தமது நோயின் காரணமாக, 44 ஆவது வயதிலேயே அதாவது, 1904 ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 24 ஆம் நாள் மரணமானார்.

ஆர்.ஜே

## விஜய் மாணவர் கழகம்


எம்.எப்.ஹப்சா,
ஹிஜ்ரா மாவத்தை,
கல்லொழுவ.
அங். இல: 4704


வை.ஸர்விதன்,
பண்டாரிக்குளம்,
வவுனியா.
அங். இல: 4705


ச.கெனிஸ்ரன் ஜெரோம்,
மின்சார நிலைய வீதி,
மூதூர்-07.
அங். இல: 4706


கு.ஓவியா,
கூழாங்குளம்,
வவுனியா.
அங். இல: 4707


ஸ்ரீ.சுகிர்தன்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.
அங். இல: 4708


எஸ்.ரங்கேஸ்,
வத்தேகம,
கண்டி.
அங். இல: 4709


சி.வைஸ்ணவி,
ஆனந்தா வீதி,
மானிப்பாய்.
அங். இல: 4710


வி.சிந்துயா,
இராமநாதபுரம்,
வட்டக்கச்சி.
அங். இல: 4711


த. அபிராமி,
கதிரிப்பாய்,
அச்சுவேலி.
அங். இல: 4712


ஆர்.எஃப்.ருஸ்தா,
தல்துவ,
அவிஸ்ஸாவெல.
அங். இல: 4713


எம்.ஷஹீர் ஹாபிழ்,
ஹாஜியார் வீதி,
செம்மனோடை-07
அங். இல: 4714


கே.பிரதீபன்,
துன்னாலை,
கரவெட்டி.
அங். இல: 4715

# ஏன்? எதற்கு?

### சாக்கடல் (Dead sea) என்பது என்ன?





சாக்கடலானது, மத்திய கிழக்குப் பகுதியில் காணப்படும் ஒரு நீர் நிலையாகும். முழுவதுமாக நிலத்தால் சூழப்பட்ட இக்கடல் ஓர் உவர் நீரேரியாகும். இதில் பல விசேட அம்சங்கள் உள்ளன. இது பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் பரந்து விரிந்து காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இன்றைக்கு இருப்பதிலும் பார்க்க, 1400 அடி உயரத்திலிருந்த நீர் சிறிது சிறிதாக வற்றி-ஆவியாகி விட்டது. இதனால், நீருடன் கலந்திருந்த உப்புக்கள் (மெக்னீசியம் க்ளோரைட், கல்சியம் க்ளோரைட், பொட்டாசியம் க்ளோரைட், சோடியம் க்ளோரைட்) எஞ்சிவிட, இங்கு உப்புகளின் செறிவு அதிகரித்து விட்டது. பொதுவாக கடல்நீர் உப்பு 4-6%, ஆனால், இங்கு 23-25%. இதனால், இந்த நீரில் எந்த மீனினமும், நீர்வாழ் உயிரினங்களும் உயிர்வாழ முடியாத நிலை உள்ளது. அதனாலேயே, இது 'சாக்கடல்' (Dead sea) அல்லது 'உப்புக்கடல்' என அழைக்கப்படுகின்றது.

### வைரம் என்பது என்ன?





நாம் எழுதும் பென்சில் கூரிலுள்ள கருமையான காரீயமும், ஜொலித்துப் பளபளக்கும் வைரமும் ஒரே காபன் (C) அணுக்களால் ஆனவை! அந்தக் காபன் அணுக்களின் வடிவம் (சாலகம்) மாறுபடுவதால் வைரத்திற்கு அதிகளவிலான பெருமைகள் கிடைக்கின்றன. ஒன்று அதன் பிரதிபலிப்பு மற்றும் அழகு. இன்னொன்று அதன் வலிமை. அந்தவகையில், உலகில் மிகவும் வலிமையான பொருள் வைரம்தான்! வைரத்தைக் கட்டையால் அடித்தாலும் பாறாங்கல்லைத் தூக்கிப்போட்டாலும் இரும்பினால் நொருக்கப்பார்த்தாலும் அதற்கு எவ்வித சேதமும் ஏற்படுவதில்லை. அவ்வளவு உறுதியானது. இந்த வைரத்தைவிட மிக வலிமையான பொருள் உலகில் வேறெதுவும் இல்லை. அதனால்தான் வைரத்தைப் பட்டை தீட்ட வைரத்தையே பயன்படுத்துகிறார்கள்.

ஜெ.விபாகர்


படத்தை
இங்கே
ஒட்டவும்



விஜய்
மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

பாடசாலை: ..............................

வகுப்பு: ..............................

திகதி: ..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீன கற்குகையொன்றில் செம்மான் மனிதனின் எச்சங்கள் கண்டுபிடிப்பு!



*சீனாவில் கற்குகை ஒன்றில் இருந்து கற்கால மனிதர் இருவரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன்படி, மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி குறித்த பல புதிய கோட்பாடுகள் வெளிவரக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் இதற்கு முன்னர் ஒருபோதும் கண்டுபிடிக்கப்படாத மனித வகையைச் சார்ந்தது என தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்*

## செம்மான்

மிகப் புராதன இரு குகைகளில் இருந்து, கற்கால மனிதர்களுடையவை என சந்தேகிக்கப்படும் நான்கு பேரின் எச்சங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற எச்சங்களானவை, இது வரை கண்டுபிடிக்கப்பட்டது போலல்லாது, மாறுபட்ட விதத்தில் அதாவது, புராதன மற்றும் நிகழ்கால மனிதர்களின் பொது லட்சணங்கள் கலந்த விதத்தில் காணப்படுவதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சுமார் 14,500 -11,500 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இவர்கள் செம்மான்களை வேட்டையாடி, தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்தியுள்ளனர். இந்த மனித எச்சமானது, ஆசியாவிலேயே வாழ்ந்த மிக வயது குறைந்த மனித இனமாகவே கருதப்படுகின்றது. இதற்கு முன்னர் இத்தகைய மனித இனம் உலகில் வாழ்ந்ததாக மானிடவியலாளர்கள் நம்பவில்லை.

அவுஸ்திரேலியாவின் நிவ் சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான குர்னோய் இது குறித்துப் பல அரிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார். செங்குகையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் ஆசியாவிலேயே, மிகத் தொன்மையான மானிட இனத்தைப் பற்றிய மனதை ஈர்க்கும் பல தகவல்களை வழங்கும் அரிய கண்டுபிடிப்பாகும் என அவர் குறிப்பிடுகிறார்.

இந்த விடயம் பற்றி அவர் மேலும் கூறுகையில்; ''அவர்கள் எமது ஆதி மனிதர்களுடன் சீனாவில் ஆதிகால விவசாய கலாசாரத்தின் ஆரம்பத்தில் வாழ்ந்திருப்பார்கள்'' என்று தாம் கருதுவதாகவும் கூறுகின்றார்.

விஞ்ஞான செய்திகளைத் தாங்கி வரும் 'ப்ளொஸ் வன்' (Plos one) சஞ்சிகைக்கு ஒரு கடிதம் மூலம் இதனை அவர் வெளிப்படுத்தியுள்ளார். புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த எச்சங்கள் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட மனிதனைவிட வேறுபட்டது.

இக்காலகட்டத்திற்குரிய மனிதன் சுமார் 11,000 வருடங்களுக்கு முன்னர் அதாவது, பனியுகத்தின் இறுதிக் காலகட்டத்தில் வாழ்ந்திருப்பான் என்றும் செம்மான் வேட்டைக்காரர்கள் குறித்தான இக் கண்டுபிடிப்பானது, மனித பரிணாம வளர்ச்சி



குறித்து புதிய அத்தியாயத்தைத் தோற்றுவிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

அத்துடன், முன்பு கண்டுபிடிக்கப்படாத நவீன மனிதக் குழுவொன்று ஆபிரிக்காவிலிருந்து இங்கு குடிபெயர்ந்திருக்க வேண்டும் என்றும் ஏற்கனவே இந்த வலயத்தில் வாழ்ந்து வந்த மனிதக் குழுவுக்கு இடம்பெயர்ந்து வந்த இந்த மனிதக் குழுவுடன் தொடர்பு இல்லாதிருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

## செம்மான் மனிதர்கள்

1989 இல் சீனாவின் யுனான் (Yunnan) பிரதேசத்தில் 'மாலுடொங்' 'maludong' என்ற இடத்தில் காணப்பட்ட 'செம்மான்' குகையில் இருந்து மூன்று மனித மண்டையோட்டு எச்சங்கள் கிடைத்தன. இந்த மண்டை ஓடுகளுக்கு பற்கள் பொருத்தமாகக் காணப்படுகின்றது. எனினும், அதனை ஆய்வாளர்கள் 2008 வரை உரிய வகையில் ஆய்விற்கு உட்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த மனித இனம் வாழ்ந்த காலகட்டத்தில் செம்மான்கள் எனும் ஒருவகை மிருக இனமும் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது. பின்னர் அவை உலகில் இருந்து முற்றாக அழிவடைந்துவிட்டன. செம்மான் மனிதர்கள் இச்செம்மான்களை வேட்டையாடி 'மாலுடொங்' குகைக்குக் கொண்டு சென்று தீயில் வாட்டி உண்டதாக ஆதாரங்கள் உண்டு. இதனாலேயே, இந்த ஆதி மனிதர்களை 'செம்மான் மனிதர்கள்' என அழைத்தனர். இக் கண்டுபிடிப்பு நிகழும்வரை கிழக்காசியாவில் ஒரு லட்சம் வருடங்களுக்கு முந்திய எவ்வித பழமையான எச்சங்களும் கிடைக்கவில்லை. எமது 'ஹோமோசேபியன்' மானிட எச்சம் மாத்திரமே கிடைத்துள்ளது. அதிலிருந்து ஹோமோசேபியன் மாத்திரமே இப்பிரதேசத்தில் வாழ்ந்ததாகக் கருதப்பட்டு வந்தது. இப்புதிய கண்டுபிடிப்பால் இக்கருத்து மாறுபடும் நிலை தோன்றியுள்ளது.


யுனானின் கலாசார, நூதன மற்றும் தொல்பொருள் நிறுவனத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் ஜி.க்யூவேயின் கருத்தின்படி, தென்மேல் சீனாவின் 'க்வின்ஹை டிபெட்' பீடபூமியில் பெருமளவிலான புவியியல் பல்வகைமையைக் காணலாம். அது உன்னதமான கலாசார பல்வகைமை நிறைந்ததொரு பிரதேசமாகும். அத்தோடு, அங்கு மிக முக்கியமான உயிரின பல்வகைமையும் காணப்படுகின்றது. அந்தப் பல்வகைமைகள் அனைத்தையும் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

## மர்மக் குள்ளர்களின் எச்சங்கள்

ஆசியாவில் வாழ்ந்த மர்மக் குள்ளர்களின் எச்சங்களைக் கடந்த பத்து வருட காலத்திற்குள் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதன் மூலம் இங்கு வாழ்ந்த நவீன மனிதன் சைபீரியாவில் இருந்து வந்த டெனிசோவியன்களுடன் கலந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

''இப் புதிய கண்டுபிடிப்புகளால் இப்புவியில் வாழும் நாம் இன்னும் கற்கவேண்டிய விடயங்கள் எத்தனையோ இருக்கின்றன'' என பேராசிரியர் குர்னோசி மேலும் விபரித்துள்ளார்.

**ஜெய்கர்**





சீனாவில் செம்மான் குகையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்த மண்டையோட்டு எச்சங்கள் புதிய ஆதி மானிட வகையினருக்குரியது என தற்போது இனங்காணப்பட்டுள்ளது.



சீனாவில் செம்மான் குகையில் காணப்பட்ட இந்த மண்டையோட்டில் ஆதிகால மற்றும் தற்கால மனித லட்சணங்கள் கலந்திருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



இதற்கு முன்னர் அறியப்படாத ஆதிகால மானிட வகையினர் என தற்போது இனங்காணப்பட்டுள்ள சீனாவின் செம்மான் மனிதனை ஓவியர் ஒருவர் இவ்வாறு சித்தரித்துள்ளார்.

noolaham.org | aavanaham.org

# புதிய மெஸென்ஜர் எப்ளிகேஷனை 'ஃபேஸ்புக்' அறிமுகம் செய்கிறது

'பேஸ்புக்' மீண்டும் இன்னொரு புதிய வசதியுடன் நண்பர்களை சந்திக்க இருக்கிறது. இதற்கென ஃபேஸ்புக் மெஸென்ஜர் அப்ளிகேஷனை அது உருவாக்கி உள்ளது. இந்த ஃபேஸ்புக் மெஸென்ஜர் விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கும். இனி நண்பர்களுடன் Chat செய்ய வேண்டும் என்றால் ஃபேஸ்புக் பக்கத்தை விரிக்க வேண்டிய அவசியமே இல்லை. இந்தப் புதிய ஃபேஸ்புக் மெசன்ஜர் மூலம் எளிதாக Chat செய்யலாம். ஏதாவது புதிய செய்திகள் நண்பர்களிடம் இருந்து வந்தால் அதை டெஸ்க்டொப்பிலேயே சுலபமாகப் பார்த்துக்கொள்ளும் வசதியும் இதில் உள்ளது.




இதற்கு முன்பாகவே ஃபேஸ்புக் 'ஒன்ட்ரொய்ட் மற்றும் ஐ ஓ எஸ் இயங்குதளத்தில் இயங்கும் ஃபேஸ்புக் மெஸென்ஜரை உருவாக்கி இருந்தது. இதனால் ஸ்மார்ட்போன்களில் எளிதாக ஃபேஸ்புக் மெசன்ஜரை உபயோகிக்க முடிந்தது. இப்போது விண்டோஸ் இயங்குதளத்தில் உருவாகி இருக்கும் இந்த ஃபேஸ்புக் மெசன்ஜர் மூலம், மேற்படி புதிய மெசன்ஜர் அப்ளிகேஷனை கம்ப்யூட்டரிலும் பயன்படுத்தலாம்.

ஃபேஸ்புக் மெஸென்ஜர் அப்ளிகேஷன் இன்னும் சில வாரங்களில் ஃபேஸ்புக் பக்கங்களில் வழங்கப்பட உள்ளது.

# தபால் குறியீட்டு இலக்கத்தைத் தரும் இணைய சேவை




இணைய சேவையில் பதிவு செய்துகொள்வதற்கு (ரெஜிஸ்டர்) நிரப்ப வேண்டிய பத்திரத்திற்கு தபால் குறியீட்டு ('போஸ்ட் கோர்ட் -Post code) இலக்கங்களை இணையம் கேட்டுநிற்பதுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களிலும், தபால் பொதிகளை சரியான முகவரிக்கு அனுப்பவும் தேவைப்படுகின்ற எந்தவொரு நாட்டினதும் போஸ்ட் கோர்ட்டினை அறிந்துகொள்வதற்கு நாடவேண்டிய இணைய முகவரி வருமாறு; geopostcode.com

# விரைவாக டவுன்லோர்ட் செய்யலாம்

இணையத்திலுள்ள வீடியோ கிளிப்களை விரைவாக தரவிறக்கம் (டவுன்லோர்ட்) செய்துகொள்வதற்கு வசதியாக மென்பொருள் (software) ஒன்று அறிமுகமாகியுள்ளது. இதன் பெயர் 'டவுன்லோட் மெனேஜர்' ஆகும். இதனை டவுன்லோர்ட் செய்துகொள்வதற்கு அணுக வேண்டிய இணைய முகவரி ilivid.com




இணைய சேவையில் Printout ஐ எடுக்கும்போது அவசியமற்ற பக்கங்களும் 'பிரின்ட்' ஆவதைத் தடுப்பதற்கு பிரின்ட் ஃபிரெண்ட்லி என்ற இணையத்தளத்தை நாடமுடியும். இதற்கு Printfriendly.com என்ற முகவரிக்குச் சென்று, பிரின்ட் எடுக்க வேண்டிய இணைய சேவையின் முகவரியை அருகிலுள்ள பொக்ஸில் டைப் செய்ததும் 'பிரின்ட் வியூ' வை அது காட்டும். அதன்போது தேவையான பக்கங்களை மாத்திரம் நாம் தெரிவு செய்யமுடியும்.




# தேவையானதை மட்டும் பிரின்ட் செய்வதற்கு







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, ஜூன் மாதம் 20 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday June 20, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org